நன்றி - நூலகத்திட்டம்

WOMEN'S EDUCATION & RESEARCH CENTRE LIBRARY

සරිනිහර්
SARINIHAR

# சரிநிகர்

சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

இதழ் 26 16 - 31 ஜூலை 1993 விலை 7/=

## சமநீதி





கோட்டோடர் இருந்தும் கொலைக் குற்றச் சாட்டிருந்தும்
போட்டேறிக் களவாகப் போயிருந்தும - நாட்டமின்றி
ஏய்க்க விட்டோ மவரை என்கின்றீர்; பூனைக்கும்
நாய்க்குமுண்டோ சமநீதி

- ஈழ மோகம்

# "எங்களை அல்ல; எங்கள் பிணங்களை அனுப் பட்டும்"

## - கொழும்பு அகதிகள்

(கொழும்பிலிருந்து சாந்தன்)

**கொ**ழும்பிலுள்ள அகதி முகாம்கள் அனைத்தையும் மூடிவிடப் போவதாகவும், முகாம்களிலுள்ள அகதிகளை மட்டக்களப்பிற்கும், வவுனியாவிற்கும், புத்தளத்திற்கும் அனுப்பிவிட அரசு தீர்மானித்துள்ளதாகவும் தெரிய வருகிறது. இந்த எற்பாட்டின் முதற் கட்டமாக கடந்த 30ம் திகதி விவேகானந்த சபை அகதி முகாம் மூடப்பட்டுள்ளது. ஜூலை 20ம் திகதி ஏனைய முகாம்களும் மூடப்பட உள்ளதாகத் தெரியவருகிறது.

90 யூனில் யுத்தம் ஆரம்பமானதைத் தொடர்ந்து யுத்தத்தின் கொடூரத்தால் ஏராளமான மக்கள் வடக்கிலிருந்தும், கிழக்கிலிருந்தும் கொழும்பை நோக்கி இடம் பெயர்ந்தார்கள். அவர்களுடைய வீடு வாசல்களையும், உடமைகளையும், உயிர்களையும் கூட யுத்தத்திற்கு காவு கொடுத்து விட்டு அகதிகளாக எதுவுமற்று வந்து சேர்ந்தார்கள். இவ்வாறு வந்து சேர்ந்தவர்களுக்காகவும் 90 ஒக்டோபரில் '24 மணித்தியாலத்துள் யாழ்ப்பாணத்தை விட்டு முஸ்லீம்கள் வெளியேற வேண்டும்' என்ற புலிகளின் உத்தரவின் மூலம் தமது சொந்த பூமியை விட்டு விரட்டியடிக்கப்பட்டு வந்து சேர்ந்த முஸ்லீம்களுக்குமாகச் சேர்த்து மொத்தம் 10க்கு மேற்பட்ட முகாம்கள் கொழும்பில் உருவாக்கப்பட்டன. எனினும் தற்போது பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபம், மாணிக்கப் பிள்ளையார் கோவில், முகத்துவாரம், விவேகானந்த சபை மண்டப முகாம்கள் தமிழர்களுக்காகவும் காக்கை தீவு, மாளிகாவத்தை, குப்பியாவத்தை முகாம்கள் முஸ்லீம்களுக்காகவும் நடத்தப்பட்டு வருகின்றன.


கடந்த மாதம் விவேகானந்த அகதி முகாமிலிருந்தவர்கள் பொலிஸாரினால் பலாத்காரமாக பஸ்களில் ஏற்றப்பட்டு நாவலடி முகாமிற்கு விரட்டப்பட்டனர். போக மறுத்தவர்களது உடமைகள் முகாமிலிருந்து தூக்கி வெளியே வீசப்பட்டன. அவர்கள் பொலிஸாரால் தாக்கப்பட்டனர். கண்ணீரோடும் தமது சொற்ப உடமைகளோடும் விரட்டப்பட்டுள்ளனர். இப்போது ஏனைய முகாம்களையும் மூடிவிட அரசு தயாராகிறது.

அரசு எடுத்து வரும் இம் முயற்சிகள் தொடர்பாக அகதிகளது அபிப்பிராயத்தை அறிய சரிநிகர் இந்த அகதி முகாம்களுக்கு விஜயம்

பெரும்பாலான முகாம்களில் காலைச் சாப்பாடாக கஞ்சியே வழங்கப்படுகிறது. மத்தியானத்துக்கும், இரவுக்கும் சோறு வழங்கப்படுகிறது. நாம் சென்ற மதிய நேரம் மத்தியானச் சாப்பாட்டிற்காக சோறுடன் பூசனிக்காயும், கத்தரிக்காயும் அடுப்பிலிருந்தது. ''வழமையாக சோறும் ஒரு கறியும் தான். இன்றைக்கு இரண்டு கறியாகி இருக்கிறது'' என்றார் முகாமைச் சுற்றிக் காட்ட எம்முடன் வந்த இளைஞர் ஒருவர். ''கோவா, கத்தரிக்காய், பூசனிக்காய் என்று மாறி மாறி வரும். மீன், இறைச்சி என்ற பேச்சுக்கே இடமில்லை'' என்று தொடர்ந்து சொல்லிக் கொண்டே போனார்.

ரத்திலும் இடநெருக்கடி. போதாதற்கு விவேகானந்த சபை முகாம் மூடப்பட்ட போது அங்கிருந்த வடக்கைச் சேர்ந்த 15 குடும்பங்களையும் முகத்துவாரம் முகாமில் கொண்டு வந்து விட்டிருக்கிறார்கள்.

2



கொழும்பின் அகதி முகாமொன்று..

| முகாம்கள் | குடும்பங்கள் | மொத்தப்பேர் | ஆண்கள் | பெண்கள் | பாட்சாலை மாணவர் | 1-12 வயதுக் குட்பட்டவர்கள் |
|---|---|---|---|---|---|---|
| சரஸ்வதி மண்டப முகாம் | 211 | 515 | 292 | 223 | 56 | 139 |
| முகத்துவாரம் முகாம் | 101 | 252 | 130 | 122 | 75 | 77 |
| பிள்ளையார் கோயில் முகாம் | - | 540 | - | - | 108 | - |

## நாவலடி அகதிமுகாம்

(மட்டக்களப்பிலிருந்து என்.கே.பி)

**நா**வலடி அகதி முகாம்.

கடற்கரைப் பிரதேசம். மரங்களாலும், கிடுகுகளாலும் அமைக்கப்பட்ட கொட்டில்கள் இரண்டு. மறைப்புகளும் கிடுகுகளால்தான். சமைப்பதற்குரிய வசதிகள் எதுவும் செய்யப்படவில்லை. பாடசாலைகள் எதுவும் கிடையாது. டிஸ்பென்சரி கூட அருகில் இல்லை.

நகரத்தில் இருந்து ஆறு மைல் தொலைவில் உள்ள அந்தப் பகுதிக்கு போக்குவரத்து வசதி கட இல்லை.

ஒரு தனிமையாக்கப்பட்ட பிரதேசம் நாவலடி அகதி முகாம்.

விவேகானந்த முகாமிலிருந்தவர்களை ஏற்றி வந்து இறக்கியிருக்கிறார்கள் இங்கு.

அரை மைல்களுக்கப்பால் உள்ளது குடிநீர்க் கிணறு.

பகலில் கடும் வெப்பம்.

கடற்காற்று மணலை வாரி வீசியபடி இருக்கும்.

அவர்களில் சிலருடனான உரையாடலில் கிடைத்தவை இவை.

2

## கறுப்பு ஜூலை 83 உள்ளே

## காமினிக்கு தேசிய பந்தோபஸ்து அமைச்சு

**ஜ**னநாயக ஐக்கிய தேசிய முன்னணியை மீண்டும் ஐ.தே.கவுடன் சேர்த்துக் கொள்வதற்கான பேச்சு வார்த்தைகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாகத் தெரியவருகிறது.

பேச்சுவார்த்தைகள் திருப்திகரமாக முடிவடையும் பட்சத்தில் காமினி திசாநாயக்காவுக்கு தேசிய பந்தோபஸ்து அமைச்சு (லலித்தும் முன்னர் இதே அமைச்சராகவிருந்தவர்) அல்லது நிதியமைச்சு வழங்கப்படலாமெனவும், வடமத்திய மாகாண முதலமைச்சர் பதவியை பிரமச்சந்திரவுக்கே விட்டுக் கொடுப்பதுடன், மேலும் சில அமைச்சுகள் வழங்கப்படலாமெனவும் தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவித்தன.

ஜ.ஐ.தே.முன்னணி ஐ.தே.கவுடன் இணையும் பட்சத்தில் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக இலங்கை-இந்திய ஒப்பந்தத்தை மீளவும் நடைமுறைப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனத் தெரிய வருகிறது.

ஏற்கனவே பிரதி பொலிஸ் மாஅதிபர் உடுகம்பொல மீதான குற்றச் சாட்டுகள் அரசால் வாபஸ் பெறப்பட்டதற்கும், பதிலாக அரசின் மீதான உடுகம்பொலவுடைய சத்தி

2

நன்றி - நூலகத்திட்டம்



# அகதி முகாம்களை அரசு மூடுவதன் பின்னணி என்ன?

அரசு கிழக்கில் கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு நடாத்தத் திட்டமிட்டுள்ளது. எனினும் கிழக்கில் மக்கள் இடம் பெயர்ந்துள்ள காரணத்தை அரசிடம் சுட்டிக் காட்டி தமிழ் அரசியல் குழுக்கள் வாக்கெடுப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்திருந்தன. எனினும் கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பை நடத்துவதில் குறியாக இருக்கும் அரசு தமிழ்க் குழுக்களின் வாயடைக்க அகதிகளை மீள குடியேற்ற வேண்டியது அவசியம் எனக் கருதுகிறது.

இலங்கையும் இந்தியாவும் இந்தியாவில் உள்ள அகதிகளை அனுப்புவதில் கொண்டுள்ள உடன்பாடு காரணமாக, இந்தியா அகதிகளைத் திருப்பி அனுப்பும் முயற்சிகளில் தீவிரமாக ஈடுபட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

அடுத்த ஜனாதிபதி தேர்தல் நெருங்கிக் கொண்டிருக்கிறது. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியை நாடு முழுவதும் நடத்தும் தேர்தல் மூலமே தெரிவு செய்ய வேண்டும் என்பது அரசியலமைப்பு விதி. எனவே ஜனாதிபதி தேர்தலை வடகிழக்கிலும் நடத்த வேண்டுமானால் அகதிகளை மீளக் குடியமர்த்த வேண்டிய தேவை அரசுக்கு உள்ளது.

அண்மையில் உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் என்பன கடன் வழங்கிய போது உள்நாட்டில் மானியங்கள், உணவு முத்திரை, பாடசாலை மாணவர்களின் மதிய உணவுத் திட்டம், இலவச உதவிகள் முதலானவற்றை நிறுத்த முயற்சி செய்யுமாறு நிபந்தனை விடுத்திருந்தன. எனவே அதன் ஒரு பகுதியாக இந்த மீளக் குடியமர்த்தல் நடைபெறுகிறது.

## வாக்களிக்க அடையாள அட்டை!

தேர்தலில் வாக்களிப்பதற்கு அடையாள அட்டை கட்டாயமானது என்கிற பிரேரணை ஒன்று பாராளுமன்றத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது. ஆளுங் கட்சி, எதிர்க்கட்சி என்ற வேறுபாடின்றி அனைவரும் இப்பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்துள்ளனர்.

மலையக மக்களின் அரசியற் பலத்தையும், வாக்குப்பலத்தையும் குறைக்க மேற்கொள்ளப்பட்ட திட்டமிட்ட நடவடிக்கை இது என மலையகத்தின் தொழிற்சங்கங்கள் எல்லாம் குரல் கொடுக்கின்றன.

இ.தொ.கா, ஐ.தே.கட்சிக்கு வாக்களிக்கக் கோரியது. அதே ஐ.தே. கட்சி இப்போ மலையக மக்களின் அரசியற் பலத்தை சிதைக்க முனைகிறது.

தொண்டமான் என்ன செய்யப் போகின்றார்.

## எங்களையல்ல...

ஜனாதிபதி கொலைச் சம்பவத்தின் பின் ஈ.பி.டீ.பியினர் அகதிகளுக்கான தமது மேற்பார்வையை நிறுத்தி விட்டதாக முகத்துவாரம் முகாமிலிருந்தவர்கள் தெரிவித்தனர். எனினும் மாணிக்கப் பிள்ளையார் முகாமில் அவர்களது மேற்பார்வை இன்னமும் இருக்கிறது. இந்த முகாமில் பத்திரிகையாளர்களுக்கு தகவல் கொடுக்கக் கூடாதென சமூக சேவைத் திணைக்களத்தினர் கூறியுள்ளதாக முகாம் அலுவலகத்தினர் தகவல் தர மறுத்தனர். அகதிகளாக இருந்தவர்களுடன் உரையாட முற்பட்ட போது ''முகாமுக்குள் உங்களுடன் பேசுவது எமது பாதுகாப்பிற்கு இடைஞ்சலாக இருக்கும்'' என சில இளைஞர்கள் அச்சம் தெரிவித்தனர்.

பாதுகாப்புக் காரணங்களுக்காக முகாம்களில் உள்ள இளைஞர்கள் முகாம்களை விட்டு வெளியே செல்வது குறைவு. எனினும் சரஸ்வதி மண்டப முகாமில் கடந்த வாரம் பொலிஸாரால் பெயர் குறிப்பிடப்பட்டு அழைத்துச் செல்லப் பட்ட மூன்று இளைஞர்கள் இது வரை விடுவிக்கப்படவில்லை.

''கொழும்பில் கைது செய்யப்பட்டால் ஒரு கிழமையோ பத்து நாட்களின் பின்னரோ வெளியே வருவதற்கான வாய்ப்பு இருக்கிறது. ஆனால் மட்டக்களப்பிலோ, அம்பாறையிலோ கைது செய்யப்பட்டால் பெருமளவில் திரும்பி வருவதற்கான வாய்ப்பே இல்லாமலிருக்கும். கைது செய்யப்படுபவர்கள் பற்றிய தகவலே இல்லாமல் போய் விடும். குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில் தமிழ் இளைஞர்கள் பலர் புலிகள் என்று காட்டிக் கொடுக்கப்பட்டு கைதுகளோ, காணாமல் போதலோ குறைந்ததாகவில்லை. அதை நிறுத்துவதற்குப் பதிலாக எங்களைப் போ என்று துரத்துகிறார்கள். அதை நிறுத்தினால் நாங்களாகவே போய் விடுவோம்'' என்றார் அவர்களில் ஒருவர்.

''நாங்கள் விதைத்த வயல்களில் இப்போது விதைக்க முடிவதில்லை. நாங்கள் விதைக்கப் படையினர் அறுத்துக் கொண்டு போகிறார்கள். நிலங்களையே விதைக்க விடாமல் பறித்திருக்கிறார்கள். நிலமுமில்லாமல், தொழிலுமில்லாமல் அங்கே போய் என்ன செய்வது?'' என்பது இன்னொருவரது கேள்வி.

இது தவிர தற்போது இங்குள்ள பாடசாலைகளில் எமது பிள்ளைகளைச் சேர்த்து படிப்பித்து வருகிறோம். அரசாங்கம் மீளக் குடியமர்த்துவதாகக் கூறி மீண்டும் இன்னொரு அகதி முகாமுக்கே எங்களை அனுப்பி வைக்கும். எங்களுடைய வாழ்க்கை தான் இப்படி. பிள்ளைகளைக் கூட ஒழுங்காக வளர்க்க முடியவில்லையே. இது ஒரு பெண்மணியின் ஆதங்கம்.

தமிழர்களுக்கான இந்த மூன்று முகாம்களிலும் 83 படுகொலையின் போது ஏனைய இடங்களிலிருந்து அகதிகளாய் வட கிழக்கிற்கு புலம் பெயர்ந்திருந்த மலையகத் தமிழ் மக்கள் மீளவும் அகதிகளாய் வந்திருந்தனர். ''எங்களுக்கு அங்கு போயும் வாழ முடியவில்லை. இங்கு அகதி முகாமிலும் தொடர்ந்திருக்க முடியாது. எங்கு போய் வாழ முடியுமென்றும் புரியவில்லை.'' என்பது அவர்களது துயராக இருந்தது.

அகதிகளைத் திருப்பியனுப்புவது தொடர்பாக சமூக சேவைகள் திணைக்களத்தால் அறிவிக்கப்பட்ட போது ஒரு குடும்பத்திற்கு 2000/= பணம் கொடுப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. ''இப்படி எத்தனையோ முறை வீடு உடைக்கப்பட்டதற்கும், இடம் பெயர்ந்ததற்கும் நிவாரணம் தருவதாக வாக்குறுதி தந்தார்கள். அவ்வளவுதான். அதற்கு மேல் எதுவும் இல்லை. இது தவிர இந்த அகதிகள் நாவலடி முகாமுக்கு அனுப்பப்பட மாட்டார்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. அவ்வாறாயின் எந்த இடத்திற்கு அனுப்பப்படுவார்கள் என அறிவிக்கவும் இல்லை.. எனினும் இன்னொரு அகதி முகாமுக்குத் தான் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

விவேகானந்த முகாம் போல, மற்றைய முகாமிலிருப்பவர்கள் பலாத்காரமாக அரசு அனுப்பும் முயற்சிக்கு எதிர்ப்புத் தெரிவிக்க விரும்பவில்லை. ''ஏற்கனவே உண்ணாவிரதம் இருந்த நிலையில் பலாத்காரமாகத் தாக்கி ஏற்றப்பட்ட விவேகானந்த சபை அகதிகளுக்கு நடந்தது என்ன? எனவே அரசு பலாத்காரத்தைக் கையாண்டால் எங்களுக்கு போவதைத் தவிர வேறுவழியில்லை'' என்பது அவர்களது அபிப்பிராயமாக இருந்தது. இறுதியாக காக்கை தீவு முஸ்லீம் அகதி முகாமிற்குச் சென்றிருந்தோம். யாழ்ப்பாணத்திலிருந்து புலிகளால் விரட்டப்பட்டு வந்தவர்கள். மிகவும் சுருக்கமாகச் சொன்னார்கள். எங்களது முகாமை அரசு மூடுவது நியாயமில்லை. நாம் திரும்பிப் போக முடியாது. வற்புறுத்தினால் எல்லா அகதிகளுக்காகவும் உண்ணாவிரதம் இருப்போம். வேண்டுமானால் எங்களை அல்ல; எங்கள் பிணங்களை இடம் பெயர்க்கட்டும் அரசு.


## நாவலடி ...

''மிகக் கட்டாயமான முறையில் பஸ்களில் ஏற்றப்பட்டோம். முதலில் எம்மை மட்டக்குளி முகாமிற்கே கொண்டு செல்வதாகக் கூறினார்கள். ஆனால் பின்புதான் தெரிந்தது மட்டக்களப்பிற்குக் கொண்டு செல்லப்படுகிறோம் என்று. இராணுவத்தினரும், ஈ.பி.டீ.பி யினரும் எம்மோடு வந்தனர்.''

''வைத்தியசாலைக்குச் செல்ல வேண்டுமெனக் கூறிய கர்ப்பிணிப் பெண்ணொருத்தியின் கணவர் பொலிஸாரினால் உதைக்கப்பட்டிருக்கிறார். இதனால் அந்தக் கர்ப்பிணிப் பெண் மயங்கி விழுந்தார். அவரும் நாவலடி முகாமில் இருக்கிறார்.''

''அரசாங்கத்தினால் குறிப்பிட்டபடி போதியளவு நிவாரணம் வழங்கப்படவில்லை. பதினைந்து நாட்களுக்கு 168/= பெறுமதியான பொருட்கள் தந்திருக்கிறார்கள். அவ்வளவுதான்.''

''இவை எல்லாவற்றையும் விட எமக்கு எந்தவிதமான பாதுகாப்பும் கிடையாது. அதுதான் பிரதானமானது. எமது பாதுகாப்புக்கு எந்த உத்தரவாதமுமில்லை.''



## வடக்கு கிழக்கைப் பிரி

கிழக்கில் மக்கள் கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு நடாத்தப்படுமானால் பாரியமனிதப் படுகொலையொன்று நடைபெறக்கூடிய சாத்தியம் உண்டு. எனவே செய்யவேண்டியது என்னவெனில் அம் மாகாணத்தில் மக்கள் கருத்துக்கணிப்பு வாக்கெடுப்பு நடாத்தாது தற்காலிகமாக இணைக்கப்பட்டுள்ள வடக்கு கிழக்கு மாகாணத்தை அவசரகாலச் சட்டத்தின் கீழ் அல்லது பாராளுமன்றச் சட்டம் ஒன்றின் மூலம் உடனடியாகப் பிரிக்க வேண்டுமென பிக்குகள் புத்திஜீவிகளால் கொழும்பு நகரின் பல பகுதிகளில் விநியோகிக்கப்பட்டுள்ள துண்டுப் பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

திவயின 02.07.93

## மேல் மாகாணம் எமக்கு

இன்னும் இரண்டு மாதங்களில் மேல் மாகாணசபையை ஜனநாயக ரீதியாக நாம் வீழ்த்துவோம். ஓகஸ்ட் மாதமாகும் போது அது சரிவரும் அறிகுறி உள்ளதாக உணவு, கூட்டுறவு,சனசக்தி அமைச்சர் திரு.வீரசிங்க மல்லிமராச்சி அவிசாவளையிலுள்ள சீதாவகபுர நகரசபை மண்டபத்தில் 11.07.93 அன்று மாலை நடைபெற்ற கலந்துரையாடலில் தெரிவித்துள்ளார்.

வீரசிங்க மல்லிமராச்சி லங்காதீபவில் 12.07.93

## நீர்ப்பீரங்கி கொள்வனவு

பெருந் தெருக்களிலும் பொது இடங்களிலும் பல்வேறு எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு நீரைப் பிசிறியடித்துக் கலைப்பதற்கென ரூபா10 லட்சம் செலவில் நீர்ப்பீரங்கி ( (WATER CANNON) )யுடன் கூடிய வாகனமொன்று இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

திவயின- 07.07.93

## செஞ்சிலுவைச் சங்கம்

வடக்கில் மட்டும் செஞ்சிலுவைச் சங்கம் அனுதாபம் கொள்வது பற்றி அரசும் மக்களும் தற்போதையதை விட மிக அவதானமாக இருக்க வேண்டும்.

திவயின ஆசிரியர் தலையங்கத்தில்
12.07.93

## விரைவான தீர்வுக்கு தொண்டமான் கோரிக்கை

பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் திரும்பவும் பங்களிக்குமாறு அதன் தலைவர் திரு. மங்கள முனசிங்க என்னிடம் கேட்டிருந்த போதும் அவ்வாறு அந்தத் தெரிவுக்குழுவில் பங்கு பற்றுவதன் மூலமாக எதுவித பலனும் ஏற்படும் என என்னால் நம்பமுடியவில்லை. நாம் தெரிவுக் குழுவைப் பகிஷ்கரித்ததன் பின்பு திரும்பவும் அதில் கலந்து கொள்வதற்கு, புதிதாக மாற்றம் எதுவும் அதில் ஏற்படவில்லை.

தெரிவுக்குழுவிற்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் முன்வைத்த யோசனைகள் மிகவும் பொருத்தமானவை என நான் கருதுகின்றேன். ஒற்றையாட்சியின் கீழ் தமிழ் மக்களுக்கு கூடிய அதிகாரங்களை பெற்றுக் கொடுப்பது எமது யோசனைகளின் அடிப்படை விடயமாகும். தெரிவுக்குழு எமது யோசனைகள் முக்கியமானவை என ஒரு போதும் ஏற்றுக் கொண்டு அதற்குச் செவி சாய்க்கவில்லை.

தொண்டமான் ராவயவில் 11.7.93

ஹெட்டியாரச்சி.

## காமினிக்கு....

யக் கடதாசி வாபஸ் பெறப்பட்டதற்கும், இந்தப் பேச்சுவார்த்தைக்கும் தொடர்பிருப்பதாகப் பேசப்படுகிறது.

ஜ.ஐ.தே.முன்னணியையோ அல்லது வேறெந்தக் கட்சியையோ ஐ.தே.கவுடன் இணைப்பது தொடர்பாகப் பேச்சுவார்த்தை நடாத்த ஐ.தே.கட்சி ஜனாதிபதி விஜயதுங்காவுக்கு அதிகாரமளித்திருப்பதாகவும், இதே அதிகாரம் ஜ.ஐ.தே. முன்னணியின் காமினிக்கு அளிக்கப்பட்டிருப்பதும் தெரிந்த விடயங்கள்.

எனினும் லலித் ஆதரவாளர்கள் சிலர் இவ்வாறான இணைப்பை எதிர்த்து வருகின்றனர். இவ்வெதிர்ப்பைச் சமாளிப்பதற்காக ஐ.தே. கட்சியுடன் இ.தொ.கா கொண்டுள்ள உடன்பாடு போல் ஜ.ஐ.தே. முன்னணியினர் ''தனித்துவத்தை'' பேணிக் கொண்டு இணைவது என்கிற முடிவு எடுக்கப்படலாம் எனவும் தெரியவருகிறது.

ஜ.ஐ.தே.முன்னணி ஐ.தே.கவுடன் சேர்ந்தால் மாகாணசபையில் ஜ.ஐ.தே.முன்னணியின் ஆதரவு தனக்குத் தேவையில்லை எனச் சந்திரிகா கூறியுள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

நன்றி - நூலகத்திட்டம்



இலங்கை இந்திய ஒப்பந்தம் எழுதப்பட்டு வருகிற ஜூலை 29ம் திகதியுடன் ஆறு ஆண்டுகள் பூர்த்தியாகின்றன. அண்மையில், இலங்கையின் இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பாக கருத்து தெரிவிக்கையில் திரு.காமினி திசநாயக்கா, 'இலங்கை இந்திய ஒப்பந்தம்' தமிழ்மக்களின் பிரச்சினையைத் தீர்க்க உள்ள சிறந்த வழியாகும்' என்று தெரிவித்துள்ளார்!

# இலங்கை - இந்திய ஒப்பந்தம்; ஒரு அமைதிப்பொறி



ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சியும் இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் சரத்துகளை அமுல்படுத்துவதில் கவனம் செலுத்துமாறு இந்தியாவை அண்மையில் கேட்டுக் கொண்டது...

ஆனால் இந்த இலங்கை இந்திய ஒப்பந்தம் உண்மையில் தமிழ் மக்களின் பிரச்சினையை தீர்க்கவென உருவாக்கப்பட்ட ஒன்றுதானா? என்பதை இது உருவாக்கப்பட்ட சூழலை கவனித்தால் நன்றாக புரிந்து கொள்ளமுடியும்.

எல்லோரும் பீற்றுவது போல இவ் ஒப்பந்தம் தேசியஇனப் பிரச்சினையை தீர்த்துவைக்கவென உருவாக்கப்பட்ட ஒன்று அல்ல. உண்மையில் அது ஒரு விபத்து அல்லது இன்னும் சரியாகச் சொன்னால் அப்படி ஒரு பிரச்சினை இருப்பதை மறுத்து நிலமை சுமுகமாகவே இருக்கிறது என்று காட்டிக் கொள்ள செய்யப்பட்ட தந்திரம். இலங்கை இந்திய அரசுகளுக்கு இடையில் ஏற்பட்டு வந்த ராஜரீக உறவுகளின் இறுக்க நிலையை தளர்த்திக்கொள்ள செய்யப்பட்ட ஒரு செயல் என்று வேண்டுமானால் சொல்லிக் கொள்ளலாம். எப்படியோ, நாடுகளின் பூகோள அரசியல் அர்த்தத்தில் இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர் ஜெயவர்த்தனாவினதும் அவரது தலைமையிலான இலங்கை அரசினதும் இந்தியாவுக்கு எதிரான சவால்களை ஒடுக்கி இந்தியா இலங்கை மீது தனது மேலாண்மையை நிறுவிக் கொண்ட ஒரு நிகழ்வு என்று இந்த ஒப்பந்தக் கைச்சாத்தை வரலாறு குறித்துக் கொண்டுள்ளது.

இந்திய அரசியல் விமர்சகர் p.s சூரிய நாராயணன் சொல்வது போல இவ் ஒப்பந்தம் **'இந்தியாவை பிராந்தியத்தின் வல்லரசு'** என்று அங்கீகரிக்க வைத்ததே உண்மையில் நடந்தது ஆகும்.

1971 இல், அமெரிக்க எதிர்ப்புகளையும் மீறி கிழக்குப் பாகிஸ்தான் பங்களாதேஷாகப் பிரிவதற்கு உதவிய தன் மூலமும்-அல்லது பிரித்து வைத்ததன் மூலமும்-அங்கு இந்திய சார்பு அரசொன்றை உருவாக்கிக் கொண்டதன் மூலமும் உலகுக்கு முன்னால் இந்தியா தன்னை ஒரு பிராந்திய வல்லரசாக நிரூபித்துக் கொண்டது. 1977ல் மொரார்ஜி தேசாய் வந்து போன மூன்றாண்டுகளின் பின் 1980 இல் திரும்பவும் ஆட்சிக்கு வந்த இந்திராகாந்தி இந்தியாவை பிராந்திய வல்லரசாகப் பேணுவதில் மிகவும் கவனமாகவே இருந்தார். இந்திராகாந்தி இலங்கை ஜனாதிபதியை, இந்தியாவின் பிராந்திய வல்லாதிக்கத்தை ஏற்கவைக்க பலதடவைகளில் பலவந்தப்படுத்தியும் வந்தார் என்பது வெளிப்படையான உண்மையாகும்.

இந்திராவின் மறைவின் பின்வந்த ராஜிவ்காந்தி - பிதுரார்ஜிதமாக அவருக்கு கிடைத்த கட்சித்தலைமை மற்றும் பிரதமர் பதவிகளுடன் - ஒருசில தடுமாறுதல்களுக்கு ஆரம்பத்தில் உள்ளாகிய போதும் இந்திய வல்லாதிக்க நோக்கை தொடர்ந்து கடைப்பிடிக்கவே செய்தார். இறுதியாக 1987 இல் கைச்சாத்தான ஒப்பந்தத்தின் மூலம் இலங்கை ஜனாதிபதியை தவிர்க்க முடியாமல் இந்திய வல்லாதிக்கத்துக்கு அடிபணிய வைத்தார்.

இந்தியா, பல வருடங்களாக பிராந்தியத்தின் ஒரே வல்லாதிக்க நாடாக தன்னை நிறுவி வந்துள்ளது. இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன அண்மையில் இதை அங்கீகரித்துள்ளார். தெற்காசியாவின் பிராந்திய வல்லரசாக இந்தியாவை அங்கீகரிக்கின்ற அவரது முடிவே யூலை 29,1987 இல் இலங்கை இந்திய ஒப்பந்தம் எழுதப்பட காரணமாக அமைந்தது...

இலங்கை ஜனாதிபதியின் விருப்புடன் எழுதப்பட்ட இவ் ஒப்பந்தம் மூலமாக, இலங்கை அரசு, தீவின் அரசியல் நிகழ்வுகளில் ஒரு முக்கியமான பாத்திரத்தை இந்தியாவுக்கு வழங்கியது....இது சிங்களவர்கள்மத்தியிலும், சில-மிகச்சில-தமிழர்கள் மத்தியிலும் அதிருப்தியை ஊட்டியது உண்மையே. சிங்களவர்கள் ஜனாதிபதி இந்தியாவுக்கு இலங்கையின் அரசியலில் தலையிட வாய்ப்பளித்ததையும், குறிப்பாக ஒரு தமிழ் மாகாணம் உருவாக்கப்பட்டு அங்கு தேர்தல் நடாத்தப்பட உள்ள தனையும் ஆதரிக்க மறுத்தனர். அவர்களைப் பொறுத்தவரை இந்தியாவை தொடர்ந்து எதிர்த்து வந்த ஜே. ஆர். - அது இலங்கை அரசியலில் தலையிடுவதாக குற்றம் சாட்டி வந்த ஜே.ஆர் - திடீரென்று குத்துக்கரணம் அடித்துள்ளதாக கருதினர். தமிழ்ப் 'பயங்கரவாதிகட்கு' வாய்ப்பும் வழியும் இந்தியா கொடுத்து வருவதாக அவர் தொடர்ந்து குற்றம் சாட்டி வந்தார்.

ஆயினும் இரட்டை வேடம் போடுவதில் தேர்ந்த அரசியல் ஞானியான ஜே.ஆர்.இந்தக் குற்றச்சாட்டுகளை கணக்கெடுக்காது தலைகீழாக இந்தியாவை நோக்கி திரும்பினார். அவர் தமிழ் பயங்கரவாதிகளை, குறிப்பாக புலிகளை நிராயுதபாணிகளாக்கவென இந்தியப் படை இலங்கை வருவதற்கான வேண்டுகோளை விடுத்தார்..... (ஆக IPKF இங்கு வந்தது அமைதி காக்க அல்ல என்பது தெளிவாகிறது. (மொ-ர்)

**''தமிழ் தேசிய வாதத்தை எதிர்ப்பதில் நீண்டகால அரசியல் பின்னணி கொண்டவரும், பெரும்பான்மை சிங்கள மக்களின் பிரதிநிதியுமான ஜே.ஆர் ஜெயவர்த்தனா இலங்கைத் தமிழ் பயங்கரவாதிகளை அடக்கும் பொறுப்பை இந்த ஒப்பந்தம் மூலம் இந்தியாவிடம் எதிர்பார்த்தார்.''**

PEACE TRAP
p.s சூரியநாராயணன்



ஆக மொத்தத்தில் 'தமிழ்ப்பயங்கரவாதிகளையும் அவர்களது விடுதலை உணர்வையும் அடிப்படையாக வைத்து இலங்கையை இந்தியா தனது கைக்குக் கீழ்ப்பட்ட நாடாக நடாத்துவதற்கும், இந்தக் காரணங்களை வைத்து 'தமிழ்ப் பயங்கரவாதிகளையும்' அவர்களது போராட்டத்தையும் நசுக்கவும் இலங்கை அரசும் இந்திய அரசும் தமக்குள் செய்து கொண்ட ஒப்பந்தமாகவே இது அமைந்தது. இந்த ஒப்பந்தம் கொண்டுள்ள சரத்துக்கள், இந்தப் பின்னணிகளை மூடி மறைத்து, தமிழ்மக்களின் பிரச்சினை தீர்க்கப்படுவதற்கான நிகழ்ச்சிகள் நடக்கின்றன என்று காட்டி 'ஊரை ஏய்க்க' எழுதப்பட்ட சரத்துக்களாக அமைந்தன! 'இலங்கை ஒரு பிரிக்கப்பட முடியாத நாடு' என்று மீண்டுமொரு முறை வலியுறுத்தியதுடன் தமிழ்மக்களின் அடிப்படைக் கோரிக்கைகட்டும் ஆப்பு வைத்தது. இன்று வடக்கு கிழக்கு தமிழ் பேசும் மக்களின் தாயகப்பிரதேசம் என்று கத்தும் தமிழ்க்கட்சிகள் ஒப்பந்தத்தில் அது நாசுக்காக மறுக்கப்பட்டதையிட்டு கவலைப்பட்டதாகத் தெரியவில்லை.

ஒப்பந்தத்தின் சரத்து(1.4)

'வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழ் பேசும் மக்கள் வரலாற்று ரீதியாக பிற இனக்குழுக்களுடன் வாழ்ந்து வந்துள்ளார்கள்' என்று கூறுகின்றது. இந்தப் 'பிற இனக் குழுக்கள்' எவை? இவை தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய பிரதேசத்தின் தன்மையை திரிபு படுத்த திட்டமிட்டு எழுதப்பட்டவை அல்லவா?

எப்படியோ, இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதும் தமிழ்மக்களது பிரச்சினை தீரும் என்று கனவு கண்டவர்களை ஏமாற்றிவிட்டு, அது எந்த நோக்கங்களுக்காக எழுதப்பட்டதோ அவை நடைமுறைக்கு வந்தன.

ஒப்பந்தத்தின் போது பேசப்பட்ட 'அதிகாரம்' பரவலாக்கல், குடியேற்றம் போன்ற விடயங்களை ஒப்பந்தத்தில் எழுதாது விட்டு விட்டு, இரண்டு அரசுகளும் தமக்கு தேவையானவற்றை மட்டும் பொறித்துக் கொண்டன. அகதிகளை நாடுகடத்துவதும், 'பயங்கரவாதிகளை' கட்டுப்படுத்துவதும் கடிதங்களில் பரிமாறிக் கொள்ளப்பட்டன. வடக்கு கிழக்கை நிரந்தரமாக இணைப்பதா இல்லையா என்பதை கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு ஒன்றை கிழக்கில் வைப்பதன் மூலம் தீர்மானிப்பது என்று ஒப்பந்தம் கூறியது. இதை பின்போடும் அதிகாரத்தை இலங்கை ஜனாதிபதிக்கு அது வழங்கியது. ஆனால் 'என்றென்றைக்குமாக பின்போடப்படும்' என்பது போன்றவற்றைப் பற்றி அது பேசவில்லை. இவை தமிழ்த் தலைவர்களை தாஜாபண்ணுவதற்காக கூறப்பட்டது!

எதுவெல்லாம் தமிழ்மக்களுக்கு முக்கியமான பிரச்சினைகளாக இருந்தனவோ அவற்றையெல்லாம் ஒப்பந்தத்துக்கு புறம்பாக்கி விட்டு ஒப்பந்தம் எழுதி முடிக்கப் பட்டது.

ஆக, இப்படி எழுதி முடிக்கப்பட்ட இந்த ஒப்பந்தம் தமிழ் மக்களின் பிரச்சினையை எப்படித் தீர்க்கும் என்று எதிர்பார்க்கமுடியும்? உண்மையில் தமிழ் பேசும் மக்களின் தாயகப்பிரதேசத்தை ஒப்புக்கேனும் ஏற்கிற இந்த ஒப்பந்தம் அதே நேரத்தில் அவர்கள் அப்பிரதேசத்தில் ஒன்றாக வாழ விரும்புகிறார்களா என்று அபிப்பிராய வாக்கெடுப்பு நடாத்தவும் கோருகிறது. இது ஒன்றே இவ்வொப்பந்தத்தின் தன்மையை புரிந்து கொள்ள போதுமானதாகும்.

ஆக, இந்த ஒப்பந்தம் தமிழ் மக்களுக்காக அல்ல. இலங்கை இந்திய அரசுகளுக்காக எழுதப்பட்டு, தமிழ்மக்களின் தலையில் (அவர்கள் சிந்திய இரத்தத்திற்குப் பரிசாக) கட்டப்பட்டது. இதை சரியென்று காமினி கூறுவது சரி. ஆனால் ஈ.பி.ஆர் எல் எப் புக்கு இன்னுமா புத்தி வரவில்லை? அல்லது தம்மை சந்தோஷமாக இந்தியாவுக்கு ஈடுவைத்து விட்டார்களா அவர்கள்!

அரவிந்தன்

நன்றி - நூலகத்திட்டம்



# ஓயவில்லை; சோரவில்லை தொடர்ந்தார்த்தார்கள் தகர்த்தார்கள் கோட்டையை

## யாழ்ப்பாணம் இன்று - 4

இராணுவ ரீதியாக புலிகள் மிக உக்கிரத் தாக்குதலை மேற்கொள்ளத் தொடங்கியிருந்த காலம். புலிகளுக்கு இராணுவ ரீதியாகத் தங்களது பலத்தை நிரூபிக்க வேண்டிய அவசியம்.

முக்கியமாக யாழ்கோட்டை இராணுவமுகாம் புலிகளின் உக்கிரத் தாக்குதலுக்கு இலக்கானது. மூன்று முறை பெரும் போர் தொடுத்து அதனைத் தகர்க்க முயற்சித்தார்கள். இது ஒருமானப் பிரச்சினையாக புலிகளுக்கு இருந்தது. உண்மையில் யாழ்ப்பாணத்து மக்களுக்கும் இது மானப் பிரச்சினைதான். தமிழர் பிரதேசத்தின் தலைநகர் என்று சொல்லத் தக்க யாழ்ப்பாணத்தில் ஒரு வடு போல யாழ் கோட்டையில் இராணுவம். யார் இதனைப் பொறுப்பார்கள்? புலிகள் ஓயவில்லை; சோரவில்லை. தொடர்ந்தார்கள், தகர்த்தார்கள்.



உண்மையில் இக்காலங்களில் புலிகளின் மனோ நிலை பலத்த சோதனைக்குள்ளாக்கப்பட்டது.

தொடர்ந்து பொம்மர், ஹெலி தாக்குதல் நிகழ்ந்த போதும் புலிகள் அதனை எதிர் கொண்டார்கள். ஒரு முறை பொம்மர் ஒன்றை யாழ்ப்பாணக் கடலேரியில் சுட்டு வீழ்த்தினார்கள். இது சிறீலங்கா இராணுவம் எதிர்பார்த்திருக்காத ஒன்று. இதனைக் காலையில் பத்திரிகை மூலம் அறிந்த மக்கள் தங்களது வழமையான சோகத்தையும் மறந்து குதூகலித்தார்கள்.

பொம்மர் சுடப்பட்ட சுமார் ஒரு வாரத்தின் பின்னர் கோட்டை இராணுவ முகாம் புலிகளின் கட்டுப்பாட்டிற்குள் வந்தது. கவிஞர் ஒருவர் கூறியது போல

''கத்தியின்றி ரத்தமின்றி
யுத்தம் என்று வருகுது''

என்பதனைப் போல புலிகளுக்கும் இராணுத்திற்கும் இழப்பு இல்லாமல் கோட்டை புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் வந்தது. கோட்டை இராணுவமுகாமில் அடைபட்டிருந்த இராணுவம் மண்டைதீவிற்கு எப்படியோ தப்பி ஓடி விட்டது.

இருவருக்கும் வெற்றியுமல்ல; இருவருக்கும் தோல்வியுமல்ல என்கிற நிலை. ஆனால் பொதுமக்கள் புலிகளுடன் சேர்ந்து வெற்றி விழா கொண்டாடினார்கள். பழைய இருப்பில் இருந்த வெடிக்கட்டுகள் எடுத்துக் கொளுத்தப்பட்டது. யாழ்ப்பாணத்திலிருந்து ஓமந்தைக் காடு வரை சந்தோஷம் நிலவியது.

கோட்டை அந்நிய ஆக்கிரமிப்பாளர்களின் சின்னமாக விளங்கியது என்பதனை வலியுறுத்திய திலீபனின் நினைவு நாள் அன்று கோட்டை புலிகளால் கைப்பற்றப் பட்டது. மக்கள். யாவரும் உவந்தேற்ற ஒரு விடயம்.

இது மக்களுக்குப் போராட்டம் பற்றிய நம்பிக்கையைக் கொடுத்தது. ஒருபுறம் போராளிகள் பற்றி அவநம்பிக்கை கொண்ட மக்களுக்கு இத்தகைய வெற்றிதேவையாக இருந்தது.

கோட்டையைப் பார்வையிட மக்கள் கால்கடுக்க நின்றார்கள்.

இதே காலத்தில் மக்கள் முத்திரைச் சந்தியில் யாழ்குடாநாட்டை விட்டு வெளியேறுவதற்கான அனுமதிச் சீட்டு பெறுவதற்காகவும் கால் கடுக்க நின்றார்கள்.

போர் நடந்து கொண்டிருந்த சந்தர்ப்பங்களில் ஒரு அபத்தம் நிகழ்ந்தது. திடீரென 1990 ஒகஸ்ட் 31 இலிருந்து மக்கள் யாழ்குடா நாட்டை விட்டு வெளியேறுவதற்காக புலிகளிடம் இருந்து அனுமதி பெற வேண்டும் என்றார்கள். அட, அயலில் உள்ள கிளிநொச்சிக்குப் போவதென்றாலும் பாஸ்தான். இது என்ன கொடுமை? என்று அங்கலாய்த்தார்கள் மக்கள்.

கிளிநொச்சியில் அரிசி கொஞ்சம் மலிவு. தேவராஜனும், பெரியசாமியும், யோகேஸ்வரனும், சிவகுமாரும் கொஞ்சம் அரிசி கட்டிக் கொண்டு வந்தார்கள். யாழ்ப்பாணத்தில் அவர்கள் அரிசி விற்றுவிட்டு சுமார் 300/= இலாபத்துடன் கிளிநொச்சிக்குப் போக அவர்கள் புறப்பட்ட போதுதான் அங்கு போவதற்கு அனுமதி எடுக்க வேண்டிய அவசியம் அவர்களுக்கு உணர்த்தப்பட்டது. நால்வரும் முத்திரைச்சந்தியில் கால்கடுக்க நின்றார்கள். இரண்டாம் நாள் விண்ணப்பம் கிடைத்தது. நிரப்பிக் கொடுத்து நான்காம் நாள் கிளிநொச்சி செல்ல அனுமதி கிடைத்தது. நின்ற சில நாட்களில் கிடைத்த இலாபப் பணத்திலும் அதிகம் செலவழிந்து விட்டது. விதியே என்று அவர்கள் இருந்தார்கள்.

கிளிநொச்சியில் வேலை செய்கிற அரச ஊழியர்கள் அடிக்கடி அனுமதிச்சீட்டு பெற வேண்டித் தேவை ஏற்பட்டது. உண்மையைச் சொல்கிறேன். யாழ்ப்பாணத்து மக்களுடன் ஒப்பிடுகிற போது உலகில் எந்த மக்களுக்கும் இவ்வளவு பொறுமை கிடையாது. விடிய மூன்று மணிக்கு எழுந்து வரிசையில் நின்று அனுமதிச்சீட்டு பெறுவதற்குரிய விண்ணப்பம் நிரப்பிக் கொடுத்து, பிறகு இரண்டாம் நாள் வந்து பெயர் வாசிக்கப்படுகிறதோ என்று பார்த்து அனுமதிச் சீட்டுப் பெற்று, பிறகு அடுத்த நாள் கிளிநொச்சிக்குச் சைக்கிள் மிதித்துப் போய்ச் சேர்கின்ற அசாத்திய பொறுமையை என்ன வென்று சொல்வேன்?

யாவரும் அமைதி காத்து, முகம் சுளிக்காமல் இத்தகைய வேலைகள் செய்வதற்குச் சித்தமாயிருந்தார்கள். ஒருவரும் எதிர்த்து ஏனென்று கேள்வி கேட்கவில்லை. கேட்கிற நிலையிலும் அவர்கள் இல்லை. கேட்டவர்களுக்கு இதுவரையில் என்ன நிகழ்ந்தது என்பது யாழ்ப்பாணத்து மக்களுக்குப் புரியும். இதுவும் புரியாவிட்டால் அவர்கள் முழுமடையர்கள்.

யாழ்ப்பாணத்து மக்கள் எப்போதும் மடையர்கள் அல்லர்; புத்திசாலிகள். எவரும் அவர்களை ஒன்றும் செய்து விடமுடியாது. காற்றுக்கு ஏற்றபடி வளைந்து கொடுக்கும் புற்கள் இவர்கள்.

அதனாற்றான் வாழ்கிறார்கள். எத்தனையோ பெரும் இடர் வந்தபோதும், சுமை வந்த போதும், துன்பம் வந்த போதும் ஒன்றும் அவர்களை அசைக்க வில்லை.

இராணுவ ரீதியாகவும் மனோ நிலை ரீதியாவும், அளவு ரீதியாகவும் பலம் பெற்றுள்ள நிலையில் உள்ள புலிகளுடன் இவ்வளவு நாட்களும் யாழ்ப்பாணத்து மக்கள் நின்று நிலைக்கிறார்கள் தானே; நிலைத்து வாழ்கிறார்கள் தானே. வாழ்ந்து வெல்கிறார்கள்தானே. யாரினால் இது இயலும்? எவர் இவ்வாறு வென்றார்?

யாழ்ப்பாணத்துச் சமூக அமைப்பை விளங்கி, அதற்காக தனது வாழ்வை நிர்ணயித்து, காய்களை சரியாக நகர்த்தி யாழ்ப்பாணத்துச் சராசரி மனிதன் வென்றிருக்கின்றான். கேள்வி கேட்க வேண்டிய நேரங்களிலும் கேட்காமல் சமாளித்திருக்கிறான். தான் கேட்க வேண்டாத சந்தர்ப்பங்களிலும் மௌனம் காத்தான். அதனால் வாழ்ந்தான். யாராலும் யாழ்ப்பாணத்து மனிதன் பாதிக்கப்பட வில்லை.

**அருணா பரமேஸ்வரன்**

---

## சில வார்த்தை எழுத விடு

## யாழ்ப்பாணச் சமூகத்தை விளக்கிக் கொள்ளல்.

பேராசிரியர் ***கார்த்திகேசு சிவத்தம்பி*** அவர்களால் 1992 யூன் 2 ஆம் திகதியன்று காலஞ் சென்ற பேராசிரியர் சோ. செல்வநாயகம் நினைவாக யாழ் பல்கலைக்கழகத்தில் ஆற்றப் பெற்ற உரையின் சிறிது திருத்தம் பெற்ற வடிவமே இந்நூலாகும். 36 பக்கங்கள் கொண்டது இச்சிறு நூல். இந்தச் சிறிய கடுகினுள் பெரிய காரம் உள்ளடக்கப்பட்டது. யாழ்ப்பாணச் சமூகத்தை விளங்கிக் கொள்வதற்கு இது போதுமானதா என்பது வினாதான். இந்நூல் கடினமான தமிழில் எழுதப்பட்டதால், தன் முழுமைக் கருத்தையும் வாசிக்கிற யாவரிடமும் தொற்றவைக்க முடியுமோ எனச் சந்தேகம் எழுவது தவிர்க்க இயலாதது. இந்நூலாசிரியரால் முன்னர் எழுதப்பட்ட ***''யார் இந்த யாழ்ப்பாணத்தான்''*** எனும் கட்டுரையின் எளிமைத் தன்மையுடன் இதனை ஒப்பிடுகிற போது இதன் கடின நடை உறுத்துகிறது. ஆனால் குறைகள் சொல்வதோ, விமர்சனம் செய்வதோ இதனை எழுதுவதன் நோக்கமல்ல. அந்நூலில் உள்ள விடயங்களை அறிமுகப்படுத்துவதன் மூலமாக, அந்நூலின் முக்கியத்துவத்தை ஓரளவுக்காயினும் உணரச் செய்வதே இதன் நோக்கமாகும்.

யாழ்ப்பாணச் சமூகத்தை விளக்கிக் கொள்ளல் எனும் இந்நூலில் விளக்கமாக ***அதன் உருவாக்கம், இயல்பு, அணுவியக்கம் பற்றிய பிராரம்ப உசாவல்*** என்பது உபதலைப்பாக அமைகிறது.

யாழ்ப்பாணச் சமூகம் பற்றிய மானிடவியல், சமூகவியல் ஆய்வுகள் மிகச் சொற்பமாகவே உள்ளன. இத்தகைய ஆய்வினில் மானிடவியல், சமூகவியல் அறிஞர்கள் ஈடுபடவில்லை என்றே கூறலாம். அதற்குப் பல காரணங்கள் கூறலாம். பல்கலைக் கழகத்துக் கல்வியில் காணப்படும் மிகப் பெரும் குறைபாடுகளில் அது ஒன்று. வரலாற்றுத்துறை மாணவன், தமிழிலக்கியவரலாறு பற்றியோ அதன் பின்னணி பற்றியோ அறிந்திருப்பதில்லை. தமிழை சிறப்பாகக் கற்கும் மாணவன் இந்து நாகரீகம் பற்றிக் கூட அறிந்திருப்பதில்லை. இது கல்வி அமைப்பின் குறைபாடு. பல்துறைப்பட்ட அறிவு இல்லாக் காரணத்தால், தமிழில் சமூகவரலாறுகள், மானிடவியல் அம்சங்கள், தமிழிலக்கிய இலக்கண இயல்புகளுடன் ஒப்பிட்டு நோக்கல் ஆகிய ஆய்வுகளில் பூரண கவனம் செலுத்துவதில்லை.

பேராசிரியர் சமூக வரலாறு, சமூகவியல், மானிடவியல் ஆகிய துறைகளின் வழிச் சென்று தமிழிலக்கியப் பாரம்பரியத்தை மீள் நோக்குச் செய்யும் ஆய்வு முறை இதன் பின்னணியாக அமைந்தது.

இந்த ஆய்வு பின்வரும் விடயங்களைத் தனது கவனத்தில் கொண்டுள்ளது.

1. யாழ்ப்பாணத்தின் சமூகத்தை இனம்காணல்
2. யாழ்ப்பாணச் சமூகத்தின் உருவாக்கம், நிலைபேறு, அதன் தொடர்ச்சியின் சின்னமாகத் 'தேசவழமைச் சட்டம்' அமையுமாறு.
3. யாழ்ப்பாணச் சமூகத்தின் இயல்புகள் சிலவற்றினை நோக்கல்.
4. யாழ்ப்பாணச் சமூகத்தின் பண்பாடும் கருத்து நிலையும்.
5. யாழ்ப்பாணச் சமூகத்தின் சமகால அசைவியக்கத்தின் தன்மைகள் சில.

***யாழ்ப்பாண மனிதன்*** பற்றிய வரன் முறையான ஆய்வுகள் தமிழில் இல்லை யென்ற குறையை ஓரளவுக்கு இந்நூல் போக்கி உள்ளது. ***தேச வழமைச் சட்டம்*** யாழ்ப்பாணச் சமூக உருவாக்கத்தில் பெறுகின்ற முக்கியத்துவம் இந்நூலில் மிகக் கவனமாக ஆராயப் பட்டிருக்கிறது. இது யாழ்ப்பாணத்தின் வரலாற்றுச் சமூகவியல் அம்சமொன்றினை அறிவதாக அமைகின்றது.

யாழ்ப்பாணச் சமூக இயல்புகளில் தொழிலே சாதியமைப்பின் பிரதான அடிப்படையாக அமைகின்றது. தமிழகத்தில் பிராமணர்களே மேலாதிக்கம் பெறுவது போன்று யாழ்ப்பாணத்தில் உண்மையான சமூக அதிகாரம் வெள்ளாளரிடமே காணப்படுகின்றது. வெள்ளாளரும் சூத்திரராக இருந்த காரணத்தால் சற் சூத்திரர், அசற்சூத்திரர் எனும் கொள்கையை ஆறுமுக நாவலர் உட்பட பலர் வற்புறுத்தினர். சற்சூத்திரர் என்போர் உயர்ந்தோர். பஞ்சமர் எனும் கோட்பாடும் யாழ்ப்பாணத்தில் வலிமையுடையதாகின்றது.

யாழ்ப்பாணம் பற்றிய வரலாற்றுப் பிரக்ஞையை அக்கால இலக்கியங்களும் கொண்டிருக்க வில்லை. கைலாயமாலை, யாழ்ப்பாண வைபவ மாலை, கரவைவேலன் கோவை, தண்டிகைக் கனகராயன் பள்ளு, முதலிய நூல்கள் சில எடுத்துக் காட்டுகளைத் தந்துள்ளன. யாழ்ப்பாண அரசு பற்றிய வரலாற்றியல் ஆய்வும் பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் சங்கிலி நாடக நூலில் முன்னுரையாக அமைந்த ***'இலங்கை வாழ் தமிழர் வரலாறு'*** எனும் கட்டுரையிலே முக்கியமானதாகக் கொள்ளப் படுகின்றது.

இக்கட்டுரை ஊடாக இருவர் பற்றிய நோக்கு முக்கிய அவதானிப்புக்குள்ளாகிறது. ஒருவர் ***ஆறுமுக நாவலர்;*** மற்றவர் ***சேர்.பொன். இராமநாதன்.*** நாவலர் குறிப்பிட்ட ஒரு சமூக வட்டத்துக்கு அப்பால் கல்வியைக் கொண்டு செல்ல விடவில்லை. இராமநாதன் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலையில் வெள்ளாளர் அல்லாத மாணவருடன் வெள்ளாள மாணவர் சமபந்திப் போசனம் செய்வதை எதிர்த்து 1930 இல் தேசாதிபதியைச் சந்தித்தார். சைவத் தமிழ்ப் பாரம்பரியம் எவ்வளவு வலிமையுடன் விளங்கியது என்பதற்கு இவை நல்ல உதாரணங்கள். ***'சைவமும் தமிழும்'*** என்கின்ற அதிகார வரையறை, ***கந்த புராணக் கலாசாரம்*** என சுவையான முக்கியமான அம்சங்கள் உண்டு.

இத்துறை தொடர்பான ஆர்வமுள்ளவர்கள் முக்கியமாசக் கவனத்திலெடுக்க வேண்டிய நூல் இது.

வெளியீடு: தர்சனா பிரசுரம்
81, ஹவ்லொக் வீதி,
கொழும்பு -05

-சூர்யா

நன்றி - நூலகத்திட்டம்



# ஸோலிங்கன் சொல்லும் கதை

''கொலைஞர்கள் பாராளுமன்றத்தில் இருக்கிறார்கள்''

''நாஸிகளை விரட்டியடி''

''சர்வதேச ஒற்றுமை ஓங்குக''

''ஜேர்மனியப் பணமும், ஆயுதமும் உலகெங்கும் கொலை செய்கின்றன''

கோஷங்கள் ஓங்கி ஒலிக்கின்றன. துண்டுப் பிரசுரங்கள் சுறுசுறுப்பாக விநியோகிக்கப்பட்டன.

நாஸிகளை முறியடி என்ற ஸ்ரிக்கர்கள் கடைகளிலும், லைற் போஸ்றுகளிலும் ஒட்டப்பட்டன.

x x x x

29.05.93 சனிக்கிழமை இரவு ஸோலிங்கன் (Solingen) நகரில் தூங்கிக் கொண்டிருந்த ஒரு தாய், நாலு வயது சின்னப்பிள்ளை, 18, 19 வயதான இரண்டு பிள்ளைகள். இவர்களிடம் விருந்தாளியாக துருக்கியில் இருந்து வந்திருந்த 12 வயதான பெண் ஆக மொத்தம் 5 பெண்கள் நாஸிகளால் வீட்டுடன் எரித்துக் கொல்லப்பட்டார்கள். இக் கொலைகளைக் கண்டித்தும், நாஸிகளை எதிர்த்தும் ஜேர்மனியில் தலைவிரித்தாடும் இனவெறியை அம்பலப்படுத்துவதாகவும் நடந்த ஊர்வலத்தில் தமிழர்கள் சார்பாக இல்லையென்றாலும் நாங்கள் 5 பேர் பங்கெடுத்துக் கொண்டோம் !

இந்த அநியாயப் படுகொலைகள் நடந்த தினத்திலிருந்து ஸோலிங்கன் நகரிலும் , ஜேர்மனியின் பல்வேறு பகுதிகளிலும் தொடர்ச்சியாக நடைபெற்று வரும் ஆர்ப்பாட்ட ஊர்வலங்களினதும், பிற எதிர்ப்பு நடவடிக்கைகளினதும் ஒரு தொடர்ச்சியாகவே ஜேர்மனியின் எல்லாப் பாகங்களிலுமிருந்தும் வந்து கலந்து கொண்டவர்களுடன் 05.06.93 இல் நடந்த இந்த ஊர்வலம் போய்க் கொண்டிருந்தது.

5 துருக்கியப் பெண்களினதும் கொலைகளை அடுத்து நீண்டகாலமாகத் தூங்கிக் கிடந்த பத்திரிகைகளும், தொலைக்காட்சிகளும் திடீரென விழித்துக் கொண்டன. பக்கம் பக்கமாகப் படங்களுடன் செய்திகள், விசேட தொலைக் காட்சி நிகழ்ச்சிகள்... இவற்றின் உச்சக்கட்டமாக கிறிக்கெற் கொமன்றி செய்வதுபோல் தீ வைக்கப்பட்ட வீட்டிற்கு முன் நின்று ஒரு மணித்தியாலத்திற்கு ஒரு தடவை நேர்முக வர்ணனை செய்தார்கள் கிட்டத்தட்ட 5 நாட்களுக்கு.

நடந்த கொலைகள் நியோநாஸிகளால் திட்டமிடப்பட்டு நடாத்தப்பட்டன என்பதை மறைத்து, இக் கொலைகளைத் தனி ஒருவர் வெறியில் செய்தாரா அல்லது தனிப்பட்ட காரணங்களுக்காக நடந்த கொலைகளா எனத் திசை திருப்பும் வேலையில் பொதுசனத் தொடர்புச் சாதனங்கள் மும்முரமாக ஈடுபட்டிருந்த வேளையில் அவர்கள் வாயில் அவல் கிள்ளிப் போடுவதாக சில சம்பவங்கள் திடீரென்று நடந்தன.

திட்டமிட்ட இனவெறி பயங்கரவாதத்தை எதிர்த்து அரசியல் ரீதியாகப்போராட வேண்டிய சூழல் உருவாகியிருந்த போது - ஏராளமான ஜேர்மனியர்களிடம் அநுதாப அலை உருவாகியிருந்தபோது - கொலை நடந்த இரண்டாம் நாள் எரிந்த வீட்டின் முன் வந்திறங்கியது சாம்பல் ஓநாய்கள் என அழைக்கப்படும் துருக்கிய வலது சாரி ஆயுதக் கும்பலான GRAUEN WOLFE. பல்லுக்குப் பல்லு, இரத்தத்திற்கு இரத்தம், துருக்கியர்கள் கொல்லப்பட்டால் நாம் ஜேர்மனியர்களைக் கொல்வோம், துருக்கி வாழ்க என இவர்கள் பகிரங்க பிரகடனம் செய்தவுடன் அனைத்துத் தொலைக்காட்சிக் கமராக்களும் இவர்களைச் சூழ்ந்து கொண்டன. அடுத்து சாம்பல் ஓநாய்கள் துருக்கிய இடதுசாரிக் குழுக்களைப் பொல்லுகளால் தாக்கினார்கள். துருக்கிய அரசால் ஒடுக்கப்பட்ட போதிலும் ஜேர்மனியில் வாழும் ஒடுக்கப்படும் வெளிநாட்டவர் என்ற ரீதியில் எதிர்ப்பு நடவடிக்கைகளில் கலந்துகொண்ட குர்திஷ் குழுக்களையும் அடித்து நொருக்கினார்கள். பின்னர் ஸோலிங்கன் நகரமத்தியில் உள்ள கடைகள்,றெஸ்ரோறன்டுகளின் கண்ணாடிகள் உடைந்து நொருங்கின. கார்கள் தாக்கப்பட்டன. இவற்றின்போது பொலிஸ் எந்த நடவடிக்கையும் எடுக்காமல் பார்த்துக்கொண்டிருந்தது. இவற்றை ஒரு கிறிமினல் படத்துக்குறிய இலாவகத்துடன் தொலைக்காட்சிகள் படம் பிடித்து ஜேர்மனியில் வெளிநாட்டுப் பயங்கரவாதிகளின் அடாவடித்தனம் என்று ஒளிபரப்பின.

x x x x

இப்போது ஊர்வலம் பொலிஸ் நிலையம் ஒன்றின் முன் நின்றது. ஊர்வலத்தின் இருமருங்கிலும் ஜேர்மனியின் அனைத்துப் பாகங்களிலும் இருந்தும் வந்திருந்த அதிரடிப்பொலிஸாரும்,விசேட கொமாண்டோக்களும் கைகளில் பொல்லுகள்,துப்பாக்கிகளுடன் தயார் நிலையில் ஊர்வலத்துடன் தொடர்ந்து வந்து கொண்டிருந்தனர்

"பொலிஸ் நாஸிகளின் நண்பன்,"

"இப்போது ஆயுதங்களுடன் தொகையாக வந்து நிற்கும் நீங்கள் வெளிநாட்டவர்களை நாஸிகள் கொல்லும்போது எங்கு போனீர்கள்?"

"டொச் பொலிஸ் பாஸிஸ்டுகள்."

கோஷங்கள் ஆக்ரோஷமாகக் கிளம்பின. பொலிஸார் குண்டாந்தடிகளை கைகளில் ஏந்தியபடி கல்லாக நின்றார்கள்.

ஊர்வலம் தொடர்ந்து நகர்ந்து டொச்சு வங்கியைக் கடந்த போது கற்கள் பறந்தன. வங்கியின் ஜன்னல் கண்ணாடிகள் உடைந்து நொருங்கின.

"ஜேர்மனியப் பணம் உலகெங்கும் கொலை செய்கிறது."





நகரப்பகுதி ஊர்வலம் கிளப்பிய கோஷங்களைத் தவிர அமைதியாக இருக்கிறது. கடைகள் உடைக்கப்படலாம் என்ற அச்சத்தில் பல கடைகள் மூடப்பட்டே இருக்கின்றன. பாதையெங்கும் பொலிஸ்காரரும், ஊர்வலக்காரரும் தான். வெளிநாட்டவர்க்கு எதிராக எத்தனை தாக்குதல்கள் நடந்து விட்டன. எத்தனை பேரை நாஸிகள் கொலை செய்து விட்டார்கள். வெளிநாட்ட்வர்க்கு எதிராக எத்தனை கொடுமையான சட்டங்கள் போடப்பட்டன. அப்போதெல்லாம் கண்ணை மூடிக்கொண்டிருந்த ரீ.வீ.க்காரர்கள் இப்போது வந்து பேட்டி தரட்டாம் என்று கோபப்பட்டார் ஒரு துருக்கிய நண்பர். ஊர்வலத்தின் மேல் பொலிஸ் ஹெலிகொப்டர் ஒன்று வட்டமிட்டுக் கொண்டேயிருந்தது.

ஐந்து பேரின் கொலை இடம்பெற்ற மறுதினம் அரசியல்வாதிகள்,அமைச்சர்கள் என்று பலர் தமது அரசியல் நாடகத்தில் ஒரு பகுதியாக மலர்ச்செண்டுகளுடன் எரிந்த வீட்டிற்கு வந்தபோது அங்கு குழுமியிருந்த பாஸிச எதிர்ப்புக்குழுக்களால் கொலைகாரர்கள் வருகிறார்கள் என்ற கோஷத்துடன் வரவேற்கப்பட்டார்கள்.

அனைத்துப் பாஸிஸக் குழுக்களையும் தடை செய் என்று மனித உரிமைக் குழுக்கள் அரசிடம் கோரிக்கை விடுத்தன. இதுபற்றிக் கணக்கிலெடுக்காத அரசு இந்தச் சம்பவம் நாஸிகளால் திட்டமிடப்பட்டு நடாத்தப்படவில்லை. ஒருவர் அல்லது சிலரால் தனிப்பட்ட முறையில் மேற்கொள்ளப்பட்ட ஒரு தாக்குதலே என்று உத்தியோகபூர்வமாக அறிவித்தது. இதனையடுத்து எரிந்த வீட்டிற்கு அருகாமையில் வசித்து வந்த 16 வயதான ஒரு டொச் இளைஞனை பொலிசார் சந்தேகத்தின் பேரில் கைது செய்தனர். அவனின் வாக்கு மூலத்தை வைத்து மேலும் 4 பேர் தேடப்படுவதாக அவர்களின் படங்களுடன் பொலிஸின் அறிவிப்பு வெளியானது. ஆனால் இரண்டு நாட்களில் கதையே மாறியது. தாம் கைது செய்தவனுக்கு மனநோய் என்றும், அதனால் தாம் சந்தேகத்தின் பேரில் நால்வரைத் தேடுவதாக விடுத்த அறிவித்தலையும் வாபஸ் பெறுவதாகவும் பொலிஸ் அறிவித்தது. இன்று வரை ஐவரின் படுகொலை சம்மந்தமாக எந்த ஒரு நியோநாஸிக் குழுவும் குற்றம் சாட்டப்படவில்லை.

"டொச் பொலிஸால் நாஸிகள் கைது செய்யப்படுவதில்லை. சில நேரங்களில்தவிர்க்க முடியாமல் கூட்டிச் செல்லப்படுகிறார்கள். எனினும் மிக விரைவில் வெளியில் வந்து விடுகிறார்கள். காரணம் ஒன்றில் அவர்களுக்கு வயது பதினாறுக்குள் இருக்கும். இல்லையென்றால் எந்த வித தீய நோக்கமுமின்றி குடிபோதையில் செய்திருப்பார்கள். அப்படி இல்லையென்றால் மனநோயாளியாக இருப்பார்கள். ஆனால் ஒரு இடதுசாரி தும்மினால் கூட சந்தேகத்தின் பேரில் கைது செய்து விசாரணையே இல்லாமல் வருடக்கணக்காக சிறையில் அடைத்து விடுவார்கள்." என்று பல்லைக்கடித்தபடி கூறினார் அருகில் வந்த ஒரு ஒட்டோனொமன்

ஊர்வலம் சுமார் ஒன்று ஒன்றரை மணித்தியாலங்களின் பின் முடிவிடத்திற்கு வந்தது.

அந்த இடத்திற்கு சற்று அப்பால் சாம்பல் ஓநாய்கள் துருக்கியக் கொடிகளுடன் குழுமியிருந்தனர். அவர்களை ஒரு அடி கூட நகர விடாமல் பொலிஸார் சுற்றி வளைத்து தடுத்திருந்தனர்.

இப்போது மேடையில் ஏறி துருக்கிய, ஜேர்மனியக் குழுக்களைச் சேர்ந்தோர் பேச ஆரம்பித்தார்கள். ஜேர்மனிய அரசை அம்பலப்படுத்தியும், நாஸிகளை முறியடிக்க வேண்டியது பற்றியும் ஜேர்மனிய, வெளிநாட்டுக் குழுக்கள் இணைந்து எதிர்ப்பு நடவடிக்கைகளை முன்னெடுப்பது பற்றியும் அவர்கள் உரையாற்றிக் கொண்டிருக்கையில்...

அந்த இடத்தைச் சுற்றி வளைத்திருந்த பொலிஸ் கும்பலிருந்து சிறு தொகையினர் உள்ளே ஓடி வந்து ஒரு ஒட்டொனொமனை இழுத்துக் கொண்டு போய் கூட்டத்தின் மத்தியில் வைத்து தரையில் கிடத்தி கால்களாலும் தடிகளாலும் தாக்கினார்கள். இதைத் தாங்கிக் கொள்ளா முடியாத கூட்டத்தினர் பொலிஸாரை சூழ வந்து தங்கள் தோழனை விடுவிக்க முயற்சி செய்தீனர். உடனை பொலிஸார் அவர்களைத் தங்கள் குறுந்தடிகளால் அடித்து நொருக்க ஆரப்பித்தார்கள். கூட்டம் சிதறி ஓடியது.

பல நாடுகளைச் சேர்ந்த தொலைக்காட்சியினர்," பத்திரிகைகள் இந்த நிகழ்ச்சிகளைத் தொகுத்துக் கொண்டிருக்கின்றனர். அவர்கள் முன்னிலையில் எங்களை பயங்கரவாதிகள் என்று காட்டவே பொலிஸார் ஆத்திரம் தரும் வகையில் நடந்து கொள்ளுகின்றனர். தயவு செய்து குழப்பாதீர்கள் கூட்டத்தைத் தொடர்ந்து நடாத்தி முடிப்போம். என மேடையில் நின்றவர்கள் வேண்டுகோள் விடுத்தனர். கூட்டத்தினர் மறுபடி ஒழுங்குக்கு வந்தனர்.

ஆனால் சில நிமிடங்களிலேயே மீண்டும் பெருமளவு பொலிஸார் வந்து குண்டாந்தடிகளால் எல்லோரையும் கண்மூடித் தனமாக தாக்க ஆரம்பித்தனர். இப்போது கூட்டத்தில் ஒரு பகுதியினர் பொலிஸார் மீது கற்களையும் போத்தல்களையும் வீசினர். சுலோக அட்டைகளை தாங்கிக் கொண்டு வந்த தடிகளை முறித்து பொலிஸைக் தாக்க ஆரம்பித்தனர்.

வேண்டுமென்று கூட்டத்தைக் குழப்ப வேண்டாமென்று பொலிஸைக் கேட்டுக்கொள்கிறோம். கூடடத்தை ஒழுங்காக நடத்தி முடிப்பதற்கு பொலிஸார் உடனடியாக இந்த இந்த இடத்தை விட்டு வெளியேறிவிட வேண்டுமென மேடையில் நின்றவர்கள் மறுபடியும் வேண்டுகோள் விடுத்தனர்.

பொலிஸ் கேட்பதாக இல்லை. ஏற்கனவே இப்படி ஒரு தாக்குதலை செய்ய வேண்டும் என திட்டமிட்டு நடப்பதை அவர்களது நடவடிக்கை தெளிவாகவே காட்டி விட்டது. பொலிஸார் குண்டாந்தடிகளால் தாக்க கூட்டத்தினர் சிதறி ஓடு

→ 9

நன்றி - நூலகத்திட்டம்



ஜூலை இன



சரிநிகர்
18/2 அலோ சாலை,
கொழும்பு - 03
தொலைபேசி: 576704

பிரதம ஆசிரியர்: உ. சேரன்

## பின்நோக்கிப் பத்தாண்டுகள்..

**1983** ஜூலைக் கலவரம் முடிந்து பத்தாண்டுகள் ஆகிவிட்டன. பின்னோக்கிப் பார்க்கும் போது நேற்றுத்தான் நடந்தது போல திகிலூட்டும் விதத்தில் நினைவுகள் மீளவருகின்றன.

நாடு முழுவதிலும் திட்டமிட்டவிதத்தில் தமிழ்மக்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்ட தாக்குதல்கள் கோடிக்கணக்கான சொத்துக்களை அழித்தன; பலநூற்றுக்கணக்கான உயிர்களைப் பறித்தன; ஆயிரக்கணக்கில் மக்களை அகதிகளாக்கின.

வடக்கு கிழக்குக்கு வெளியே வாழ்ந்த ஒவ்வொரு தமிழனும் தாக்கப்பட்டான்; அல்லது மிரட்டப்பட்டான்; ஓட ஓட விரட்டப்பட்டான்.

அப்போது அவனுக்கு புகலிடம் அளித்து, அவனது நொந்த மனதை ஆற்றி ஆதரவு கொடுத்தது அவனது சொந்த மண்ணே. வடக்கு கிழக்கே.

அப்போது தான் அது அவனது தாயகப் பிரதேசம் என்பதை அவன் உணர்வு பூர்வமாக புரிந்து கொள்கிறான்.

அகதிகளை தாங்கி வந்த கப்பல்களில் நின்ற அகதிகள் திருகோணமலையை, மட்டக்களப்பு கரையோரத்தை, காங்கேசன் துறைமுகத்து வெளிச்சக் கூட்டை கண்ட போது கைகூப்பி தொழுது, உடல் புல்லரிக்க தாய்த்தேசம், எமது தாய்த்தேசம் என்று ஆர்ப்பரித்தது இன்று போல் நினைவில் வருகிறது.

இது நடந்து பத்தாண்டுகள் ஓடிவிட்டன.

கலவரத்தின் போது சிறைக்குள்ளிருந்த தமிழர்கள், சிறைக்கதவு உடைக்கப்பட்டு கொல்லப்பட்டது நடந்து பத்து முழுஆண்டுகள் ஓடி விட்டன.

இந்த கசப்பான அனுபவங்கள் ஏற்படுத்திய வெறியுடன் வேகம் கொண்டெழுந்த இளைஞர்கள்.....அவர்களது போராட்டங்கள்....

இந்திய உதவி என்ற மாயைக்குள் அவர்கள் சிக்கியது...

எல்லாவற்றிற்கும் மேலாக, தமது சொந்த மண்ணிலேயே தமிழ் மக்கள் அகதிகளாக்கப்பட்டது...

எல்லாம் இந்தப் பத்தாண்டுகளுக்குள் நடந்தன! போராட வென்று உணர்வுடன் புறப்பட்ட இளைஞர்களிடையே மோதல்கள் உருவாகின.

ஒருவரை ஒருவர் கொன்றனர்.

வெறிபிடித்த நாய்கள் போல துப்பாக்கிகளுடன் மாற்று இயக்கத்து உறுப்பினரை தேடி அலைந்தனர்...

பின்னாளில் இலங்கையில் நடக்கவிருந்த வீதிகளில் ரயர் போட்டு சடலங்களை எரிக்கும் நிகழ்ச்சிகட்கு இவர்கள் அன்று முன்மாதிரி காட்டினார்கள். வடக்கு கிழக்கு வீதிகளில் சகோதரச் சண்டைகளால் சடலங்களும் சதைத் துண்டங்களும் நிரம்பின.

இந்தியப் படை வந்தது.

சமாதானம் என்ற பெயரால் சண்டித்தனம் காட்டியது. எமது மக்களின் உரிமைகளை தமது பூகோள அரசியல் நலனுக்குப் பயன்படுத்த வெறியோடு போரிட்டது.

அதன் டாங்கிகளின் சக்கரங்களில் எமது மக்களும் அவர்களது உரிமைப் போராட்டமும் நயவஞ்சகமான முறையில் நசுக்கப்பட்டன.

எல்லாம் இந்தப் பத்தாண்டுகளுள்..

எமது மக்களின் உணர்வு, பாரம்பரியம், கல்வி மற்றும் பண்பாட்டுக்கு என்றென்றைக்கும் அழியாத அவமானத்தை தேடித்தந்த இன்னொரு விடயமும் நடந்தது.

எந்த தமிழ் மக்களின் விடுதலைக்காக போராடுவதாக-அவர்களின் ஏகபிரதி நிதிகளாக - தம்மை கூறிக் கொள்கிறார்களோ, அவர்களுடன் காலம் காலமாக ஒன்றாக தின்று குடித்து வாழ்ந்த முஸ்லிம் மக்களை அவர்களின் பெயரால் அந்த மண்ணைவிட்டு புலிகள் விரட்டினார்கள்! 24மணி நேர அவகாசம் கொடுத்து.

இதுவும் இந்தப் பத்தாண்டுகளுக்குள்ளே...

இந்தப் பத்தாண்டு காலம் பல்லாயிரக்கணக்கான மக்களின் உயிரைக் குடித்தது; பல கோடிக் கணக்கான சொத்துகளை அழித்தது; பலலட்சக் கணக்கான அகதிகளை உலகம் முழுவதுக்கும் விரட்டியது.

தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகள்; அரசியல் உரிமைகளுக்கு புதைகுழி தோண்டி புதைத்து விட்டு, அதன் மேல் இறுதிப்பிடி மண்ணைத்தூவ ஒரு 'தெரிவுக் குழுவையும்' அறிமுகப்படுத்தியது...

1983 ஜூலையில் தமிழன் தாக்கப்படும் போது கொதித்தான்; எதிர்த்துப் போராட விழைந்தான்; அவனுக்காக குரல் கொடுக்க ஒரு உலகமே இருந்தது.

இன்று எல்லாம் வழமையாகிவிட்டது.

1993 ஜூலை தமிழனை நாயாக்கி விட்டிருக்கிறது; அவனது சூடு சுரணை எல்லாவற்றையும் விழுங்கி ஏப்பம் விட்டுவிட்டது. அவனுக்காக பேச அவன் கூட இல்லை என்ற நிலையை உருவாக்கி விட்டுள்ளது.

இந்தப் பத்தாண்டுகளின் கூட்டிக் கழித்த மீதியாக வெறும் கொலையும் இரத்தமும் இழப்பும் மட்டும்.

இனி வரும் பத்தாண்டாவது தமிழ் மக்களுக்கு விடிவு தருவதாக அமையுமா?

எந்த நம்பிக்கையுமற்ற இந்தக் கேள்வியை எல்லோரிடமும் கேட்கிறோம்....!

## இது எனக்கு நடந்தது

**ப**த்து வருடங்களாகி விட்டது. சில விடயங்கள் மறந்திருக்கலாம். ஆனால் நான் துன்பப்பட்ட ஒவ்வொரு கணமும் ஒரு சித்திரம் போல அடிக்கடி மனத்திரையில் தோன்றித் தோன்றி மறைகிறது.

### 1983 யூலை

கொடுமை மிகுந்த அந்த மாதத்திற்கு முன்னரேயே கொழும்பில் பல இடங்களில் தமிழ் மக்களுக்கு எதிரான இனவாத உணர்வைத் தூண்டுகின்ற சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன. அதனை வாசிக்க நான் அஞ்சினேன்.

நான் கொழும்பில் பிறந்து வளர்ந்த தமிழன். எனது பெற்றோர் யாழ்ப்பாணம். நான் யாழ்ப்பாணம் தெரியாதவன்.

1983 யூலை 23 இற்கு இரண்டு நாட்கள் கழித்து (மிகுந்த சிரமத்தின் மத்தியிலேயே அந்த நாளை ஞாபகம் கொள்கிறேன்.) நானும், ஆசீக்கும் சாகிரும் பொதுசன நூலகத்திற்குச் செல்கிறோம்.

அன்றுதான் இனப்படுகொலை தொடங்கியிருந்தது. எனக்குத் தெரியாது.

நகரமண்டபத்திற்கு அருகில் ஒரு சைவக்கடை தாக்கப்படுகிறது. எவர் சில்வர் பாத்திரங்கள் உருளுகின்றன. ''இது தமிழனுடைய அலுவா. சாப்பிடுங்கள்'' என்று ஒருவன் எனது கையினுள் அல்வாத் துண்டைத் திணிக்கிறான். என் கைகள் நடுங்குகின்றன. ஆசிக் சிங்களத்தில் முணுமுணுக்கிறான். ''வாங்கிச் சாப்பிடு''.

கடை எரிக்கப்படுகிறது. சுவாலை விட்டு எரியவில்லை அமுங்கி அமுங்கி எரிகிறது.

தீயணைப்புப்படை வாகனம் வருகிறது. அதிலுள்ளவர்கள் ''ஜெயவேவா'' கோஷமிட்டு, மிகுதியையும் எரிக்கச் சொல்லி, உற்சாகக் குரல் எழுப்பியவாறு போகிறார்கள். அருகில் படித்த 'நாகரிகமான' ஒரு சிங்களப் பெண்மணி.' தமிழர்களுக்கு இது வேணும்' என்றாள்.

பஸ் கிடைப்பது கடினமாக இருந்தது.

மிகுந்த சனத்துடன் ஒரு பஸ் வந்த போது அதில் சிரமப்பட்டு மூவரும் ஏறினோம். கிராண்ட்பாஸில் எனது வீடு. உடனே போக வேண்டும்.

பஸ் மருதானையில் நின்றது. சனங்கள் அங்கும் இங்கும் ஓடித் திரிந்தார்கள்.

இறங்கிப் புறக்கோட்டைப் பக்கமாக நடக்கத் தொடங்கினோம். பஸ்ஸிற்குள்ளும், நடந்து செல்லும் போதும்,''தமிழனோ, தமிழனோ'' என விசாரித்தார்கள். நான் அடையாள அட்டையை சப்பாத்தின் மேலணிக்குள் செருகி விட்டேன். எனக்குச் சிங்களவர்கள் சிங்களம் பேசுவது போலப் பேசத் தெரியும்.

மருதானைக்கும், புறக்கோட்டைக்கும் இடையில், ஒருவர் கால் துண்டிக்கப்பட்ட நிலையில் துடிதுடித்துக் கொண்டு கிடந்தார். தமிழ் மகன் என்பது தெரிந்தது. எனது வாழ்நாளில் ஒருமுறையும் பார்த்திராத காட்சி அது.

சிங்களக் காடையர்கள் ஓடித்திரிந்தார்கள். (காடையன் என்பது தான் மிகச்சரியான சொல்.) விமானப் படை அதிகாரி ஒருவர் வந்தார். ''சுடுவேன் சுடுவேன்'' எனப் பயமுறுத்தினார். சுடவில்லை.

புறக்கோட்டைச் சந்தியில் ஒரு மோட்டார் சைக்கிளில் வந்த தமிழ் வாலிபன் இறக்கப்பட்டான். மீன் வெட்டுகின்ற பெரிய வாளால் அவன் நெற்றி பிளக்கப்பட்டது. அவன் துடிதுடித்து நிலத்தில் வீழ்ந்தான். வீழ்ந்தும் துடிதுடித்தான். அவ்விடத்தால் வந்த மினிவான் மறிக்கப்பட்டு, துடிதுடித்து விழுந்து கிடப்பவன் மேலால் மினி பஸ்ஸை ஓட்டச் சொன்னான் ஒரு காடையன். சாரதி மறுத்த போது பஸ்ஸை உடைத்து விடப் போவதாக மிரட்டினான். சாரதி மினி பஸ்ஸை எடுத்து அவன் மேலால் ஓடினான். அவன் துடிப்பு அடங்கியது. நான் முகத்தைத் திருப்பினேன்.

எனக்கு என்ன உணர்வு வந்தது? தெரியவில்லை. கலவையான உணர்வு. ஆத்திரம், ஆவேசம், பயம், கலக்கம் ஒன்றும் புரியாத உணர்வு.

புறக்கோட்டையில் பஸ் எடுத்து ஆமர் வீதிக்குச் சென்றோம். ஒரு பிக்கு ஓட்டோ நிறைய பொருட்களை (கொள்ளையடித்ததாக இருக்க வேண்டும்) ஏற்றிக் கொண்டு சென்றார்.

ஆமர் வீதியில் இருந்து நடந்து கிராண்ட்பாஸிற்குச் சென்றோம். வழியில் தமிழரது வீடுகள் உடைக்கப்பட்டுக் கொண்டிருந்தன. சிங்கள மக்கள் தூக்க இயலாமல் நிறையப் பொருட்களைத் தூக்கிச் சென்றார்கள்.

நான் வீடு அடைந்தேன். முஸ்லீம் நண்பர்கள் பிரிந்து விட்டார்கள். வீட்டில் அம்மா நின்றார்; பிறகு அப்பா, அக்கா வந்தனர்.

அயலில் உள்ள சிங்கள மக்களும் முஸ்லீம் மக்களும் ஒரு நாள் காப்பாற்றினார்கள். அருகில் ஒரு தமிழ் வீடு உடைக்கப்பட்டது. இலங்கை வானொலி சிங்களச் சேவையில் சிங்கள இனவாதம் கக்குகின்ற பாடல்கள் ஒலிபரப்பப்பட்டுக் கொண்டிருந்தன.

அரசாங்கம் ஊரடங்குச் சட்டம் என்றது. ஊரடங்கு நேரத்தில் பொலிஸாரும் இராணுவமும் காவல் நிற்கக் கொள்ளையடிக்கப்பட்டது.

எம்மைப் பாதுகாத்த சிங்கள மக்களை மற்றவர்கள் பயமுறுத்தினார்கள். ஒரு சிங்களக் குடும்பத்தின் உதவியுடன் எமக்குத் தெரிந்த முஸ்லீம் நண்பர் வீடு வந்தோம். அங்கு நாங்கள் வந்த சிறிது நேரத்திலேயே பொலிஸ் வந்தது. ''புலிகள் வந்திருக்கிறார்கள்'' என எம்மைப் பார்த்துச் சொன்னார்கள். எம்மை விசாரிக்க வேண்டும். பொலிஸ் நிலையத்திற்கு வரச் சொன்னார்கள். முஸ்லீம் நண்பரின் உதவியுடன், நாங்கள் மாளிகாவத்தை பொலிஸ் நிலையத்திற்குச் (தொடர்மாடி) சென்றோம். நாம் வானில் இருக்க அப்பா உள்ளே சென்றார். அப்பா ஒரு சட்டத்தரணி. ஒரு பலத்த சத்தமும் அடி விழுகிற சத்தமும் கேட்டது. அப்பா வாயிலிருந்து இரத்தம் ஒழுக ஒரு பல்லில்லாமல் வந்தார். பதறிப்போனோம்.

அங்கிருந்த ஒரு வயது போன பெண்மணியிடம் அப்பா,''நான் லங்கா சமசமாஜக் கட்சியைச் சேர்ந்தவன். உங்களுக்குத் தெரியும் தானே?'' என்று கேட்டார். ''நீ எதுவாக இருந்தாலும் இப்பொழுது தமிழன்'' என்றார் அப்பெண்மணி.

முஸ்லீம் நண்பர் பயந்தார். ஆகவே அந்த வீட்டையும் விட்டு வெளிக்கிடவேண்டியதானது. எம்மிடம் ஒரு சூட்கேஸ் மட்டும் இருந்தது. கொஞ்சம் பெறுமதியான பொருட்கள் அதனுள்.

சேரிப்பக்கமாக நடந்தோம். ஆபத்து எங்களைத் துரத்தியது. ஓடி முஸ்லீம் வீட்டினுள் தஞ்சமடைந்தோம். ஒரு கழிவு வாய்க்காலினுள் நாம் குனிந்தபடி நின்றோம். பிறகு அவர்கள் எங்களைச் சனசமூக நிலையத்தில் சேர்த்தார்கள். சூட்கேஸ் கிடைக்கவில்லை.

சனசமூக நிலையத்தவர் எங்களைப் பாதுகாப்பாக கொட்டாஞ்சேனை சென்பெனடிக்ற் கல்லூரி அகதி முகாமில் கொண்டு வந்து சேர்த்தார்கள். அங்கு இடமில்லை.

சிறிது நேரத்தில் ஒரு பஸ்சினுள் ஏற்றி கொட்டாஞ்சேனை மத்திய மகாவித்தியாலய அகதி முகாமிற்கு நாம் அனுப்பப்பட்டோம். அங்கு இடம் பிடித்து இருந்தோம்.

இருந்த அகதி முகாமுக்குள் புலி இருக்கின்றது என்று கூறி விசாரணைக்கென அழைத்துச் சென்ற இளைஞர்கள் பின் வரவில்லை.

இரண்டு மூன்று நாட்களுக்குள்ளேயே கொழும்பிற்குள் புலிகள் வந்து விட்டார்கள் என்று சிங்கள மக்கள் அச்சமடைந்து ஓடிய போது எமது முகாமிலிருந்த ஐந்து பேர் காணாமல் போய்விட்டார்கள்.

நான் அகதி முகாமிலிருந்து சில பொருட்கள் வாங்குவதற்காக வெளியே சென்ற போது வீதியில் நின்றிருந்த இராணும் என்னைக் கூப்பிட்டு 'நீ தமிழனா?'' என்றது. நான் ஓமெனத் தலையசைத்தேன். எனக்கு அடி விழுந்தது.

கொழும்புத் துறைமுகத்திற்கு ஒரு சரக்குக்கப்பல் வந்தது. தாங்கள் அதில் ஏற்றி அடைக்கப்பட்டோம்..

இரண்டாம் நாள் கழித்து காங்கேசந்துறை துறைமுகத்தில் அக்கப்பல் தரித்தது. அங்கிருந்து நடேஸ்வராக் கல்லூரிக்குச் சென்று முதலில் தேநீர் குடித்தோம்; பின்னர் சாப்பிட்டோம்.

அன்று தான் எனக்கு முதன் முறையாக யாழ்ப்பாணம் என்ன நிறம் என்று தெரிந்தது.

இது எனக்கு நடந்தது.●

**வா. அகிலன்.**



**83** ஜூலை இ
கள் இன்றும் மக்கள்
ரம் என்றே அ
எனினும் கலவரம
வுக்கு எதிர்த்தாக்
வில்லை. மேலும்
23 இல் தான் ஆர
வும் கூறமுடியாது
ஆங்காங்கு பல இ
கள் ஜூலைக்கு மு
ளில் நடந்து
பாரிய அளவில்
மிட்டு ஜூலையில்
லையாக இதனை

இதனை இனக்கல
டியாமைக்கான கா
கள் இச்சம்பவத்தி
தேடி வன்முறைக்கு
னர். எனினும் தமி
தாக்குதல் நடத்த
இடங்களில் தற்கா
டினாலும் இறுதி
பட்ட சம்பவங்கே
ளன.

இந் நிகழ்வுகள் ஜ
தொடங்கவில்லை

நாடு முழு ம்
கொலை ச வா
யாக நடந்தன.
திகதி எதிர்க்கட்
இருந்த அமிர்தலி
ஜே.ஆர்.ஜெயவர்
ளுக்கு அனுப்பி
கோணமலையில்
ழர்கள் தமது சொ
காடையர்களால்
னரின் உதவியுட
யப்படுவதை தடு
இரு தரப்பிலும் ந



கள் பற்றிய விபர
தவறானவை 16
கொலை செய்ய
இவர்கள் அ
சுமார் 40 பேர் செ
டன் துப்பாக்கி
டன் ஆபத்தான
பத்திரியில் அனு
னர். இவர்களி
மேற்பட்டோர் த
எரிக்கப்பட்டுள்
95% க்கு மேற்ப

நன்றி - நூலகத்திட்டம்

# ...ப்படுகொலை
## ...சதியும் பின்னணியும்



93 ஜூலை இது.
83 ஜூலை இனப்படுகொலை நடந்து முடிந்து பத்து வருடங்கள். தமிழ் மக்களின் மேலான படுகொலைகள் காலத்துக்குக் காலம் 58,77,81 என நிகழ்த்தப்பட்டு வந்தாலும் 83 படுகொலைகள் எல்லாவற்றிற்கும் மேலாகவும் உச்சமானதாகவும் இருந்தது.

வெலிக்கடைச் சிறையில் ஜூலை 25ம் திகதி 35 தமிழர்கள் கொல்லப்பட்டனர். 27ம் திகதி மேலும் 18 பேர் கொல்லப்பட்டனர். நாடெங்கிலும் ஆயிரக் கணக்கில் தமிழர்கள் கொல்லப்பட்டனர். அகதிகளாக்கப்பட்டனர்.

93 இது. இற்றைவரைக்கும் தமிழ் மக்களுக்கான தீர்வெதுவும் முன் வைக்கப்படவில்லை. ஆனால் அவ்வப்போது இனப்படுகொலைகளுக்கு மட்டும் குறைவில்லை.

தீர்வுக்கான முன்முயற்சிகள் என்ற பெயரில் 83ல் உருவாக்கப்பட்ட வட்டமேசை மாநாட்டிலிருந்து 93 இன் தெரிவுக் குழுவரை எதுவும் தீர்வெதுவுமின்றிய பம்மாத்துக்களாகவே போயிற்று.

தமிழ் மக்கள் இன்னமும் நாயிற் கடையாய் ....
83 ஜூலை பற்றிய சில குறிப்புகளும் தகவல்களும் இங்கே.

...படுகொலை
...த்தியில் கலவ
...கப்படுகிறது.
... நடக்குமள
...தல் நடக்க
...பவம் ஜூலை
...மானது என
...படிப்படியாக
...படுகொலை
...னய மாதங்க
...ண்டிருந்தன.
...ரசே திட்ட
...னப்படுகொ
...த்தியது.

... என கூறமு
...ம் தமிழ் மக்
...பாது தேடித்
...ாக்கப்பட்ட
...க்கள் எதிர்த்
...லை. சிற்சில
...காக போரா
... கொல்லப்
...ந்தேறியுள்

... 23ம் திகதி
...ம் ஆண்டு

ளின் வீடுகள் என குறிப்பிட்டிருந்தார். எனவே ஏற்கனவே இப்படி பல படுகொலைச் சம்பங்கள் நடந்துள்ளன.

மேலும் அரசு இந்நிகழ்வுகளை ஏற்படுத்த பாரிய அளவு துணை புரிந்தது. அரசைச் சேர்ந்த பலர் இதன் நீண்டகாலம் திட்டமிட்டிருந்தனர். சம்பவம் நடந்த காலப்பகுதியில் ஆத்திரதாரிகள் யார் என்பது வெளிப்படையாகத் தெரிய வரா விட்டாலும் பின்னர் இச் சம்பவங்கள் யாவற்றிற்கும் அரசே பின்னணியில் இருந்தது என்பதைத் தெளிவாக்கின. 'ராவய' ஆசிரியர் விக்டர் ஐவன் குறிப்பிட்டதைப் போன்று இக் கலவரத்திற்கு பின்னணியில் ஐ.தே.கட்சியின் முக்கியஸ்தர் பலர் இருந்தனர்.

அரசுக்கு அப்போது சில நெருக்கடிகள் இருந்தன. அவை 83 இல் தமிழர்கள் தொடர்ச்சியாக அனுபவித்து வந்த பல பிரச்சினைகளுக்கு பிரதான எதிர்க்கட்சியான தமிழர் விடுதலை கூட்டணியினர் தீர்வு காணும் படி அரசுக்கு அழுத்தம் கொடுத்துக் கொண்டிருந்தனர்.

# ஜூலை

...ப்படு
...ர்ச்சி
முதலாம்
...லைவராக
...ஜனாதிபதி
... அவர்க
...யில் "திரு
...ாவித் தமி
...யிலேயே
...ப்படையி
...லை செய்
...த்துங்கள்
...ன்செயல்



...ற்றாகவே
...கு மேல்
...ளார்கள்.
... தமிழர்.
...யங்களு
...யங்களு
...ல் ஆஸ்
...ட்டுள்ள
...பருக்கும்
... வீடுகள்
...வகளில்
... தமிழர்க

தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியினர் 21ம் திகதியுடன் பாராளுமன்றத்தைப் பகிஷ்கரித்தனர். 1977 தேர்தலில் மக்கள் தமக்கு வழங்கிய ஆணைப்படி, 21ம் திகதிக்கு மேல் தாம் பாராளுமன்றத்தில் இருக்க முடியாது எனக் கூறினர். 22ம் திகதி பாராளுமன்ற கூட்டத்துக்கு சமூகமளிக்கவில்லை. 21ம் திகதியே நவரத்தினம் எம்.பி அவரது உரையில் தான் இதன் பின்பு பாராளுமன்றத்துக்கு சமூகமளிக்கப் போவதில்லை என அறிவித்தார். அதே வேளை யாழ் மாவட்ட அபிவிருத்தி சபை தலைவர் நடராசா திடீர் இராஜினாமா செய்தார். அவர் யூலை 13 ம் திகதி ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்த கடிதத்தில் "இன்று தமிழினம் இருக்கும் இக்கட்டான நிலையில் சுயமரியாதையுடன் இந்த ஆசனத்தில் தொடர்ந்து இருக்க முடியாது" என அறிவித்தார்.

இதே வேளை தமிழர்களின் பாதுகாப்பு, நிலம், கல்வி, தொழில் முதலான பிரச்சினைகளை அரசுடன் பேசி தீர்க்க முடியாதென நம்பிய போராளிக்குழுக்கள் தோற்றம் பெற்றன. அமெரிக்காவின் மசாசூசெட்ஸ் மாநில அரசாங்கம் ஏற்கனவே தமிழ் ஈழப்பிரகடனம் செய்திருந்தது. 83 யூலை மாதம் அதே மாநிலத்தில் ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாக தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றியதுடன் அமெரிக்கர்களையும் அமெரிக்க நிறுவனங்களையும் இலங்கையில் செய்துள்ள முதலீடுகள் யாவற்றையும் வாபஸ் பெற வேண்டும் என்று அமெரிக்க மத்திய அரசாங்கத்தை வழியுறுத்தியது என்பதும் குறிப்பிடத்தக்கது.

வெலிக்கடைச் சிறையில் இனவெறியர்களால் ஜூலை 25 ம் திகதி 35 பேர் படுகொலை செய்யப்பட்டனர். பின்னர் 27 ம் திகதி 18 பேர் படுகொலை செய்யப்பட்டனர். பின்னர் நடந்த சம்பவத்தை மாத்திரம் விசாரணை செய்த கொழும்பு மாஜிஸ்திரேட் நீதிபதி கீர்த்தி ஸ்ரீ விஜேவர்தனவின் முன் சாட்சியமளித்த சிறைச்சாலை ஊழியர் பின்வருமாறு கூறியிருந்தார். தாக்கியவர்கள் தன்னிடமிருந்து சாவியை பறித்தெடுத்ததாகவும், பின்னர் கம்பிகள், பொல்லுகள் வேறு ஆயுதங்கள் தரித்திருந்ததாகவும், பலரை தாக்கியதாகவும் அவர்கள் பலத்த சத்தம் போட்டு கத்தியதாகவும் தாக்கியவர்கள் "எங்கள் சிங்களவர்கள் வெளியே கொல்லப்படுகிறார்கள், இவர்களுக்கோ இங்கு பாதுகாப்பளிக்கிறார்கள்" என்று கூறி தாக்கியதாகவும் கூறியிருந்தார். பின்னர் அச்சம்பவத்தில் தப்பிய தமிழ்க் கைதி ஒருவர் கூறும்போது பல அதிகாரிகள் நேரடியாக ஒத்துழைப்பு வழங்கியதை தான் கண்டத்தாகவும் கூறினார்.

அரசின் லேக்ஹவுஸ் நிறுவனம் தனது 'தினமின' சிங்கள பத்திரிகையின் மூலம், சிங்கள மக்கள் மத்தியில் இனக்குரோதத்தை வளர்க்க கூடிய பல செய்திகளை வெளியிட்டு வந்தது. ஜூலை 17 'தினமின' பத்திரிகையில் 15ம் திகதி சாவகச்சேரி புகையிரத நிலையத்தில் இராணுவத்தினரால் கொல்லப்பட்ட இரண்டு தமிழ் இளைஞர்களான அந்தனிபாலன், அருள்தாசன் ஆகியோர் பிரபாகரனுக்கு மிகவும் நெருக்கமானவர்கள் என்றும், பாடசாலை காலத்தில் இவர்கள் தேசிய கொடியை கொழுத்தியிருந்ததாகவும், பல சிங்களவர்கள் கொலைசெய்யப்பட்டதற்கும் ஐ.தே.க.வினர் கொலை செய்யப்பட்டதற்கும் பல கொள்ளைச் சம்பவங்கள் நடை பெற்றதற்கும் இவர்களே காரணமென்றும் இவர்களின் தலைமையில் நடந்த சம்பவங்களுக்கான ஒரு நீண்ட பட்டியலையும் அப்பத்திரிகை குறிப்பிட்டிருந்தது. இதே பத்திரிகையில் புலிகள் சம்பந்தப்பட்ட பல கொள்ளைச் சம்பவங்களை வெளியிட்ட போதும் அதே காலத்தில் நடைபெற்ற பல தமிழர்கள் கொலை செய்யப்பட்ட சம்பவங்களில் ஒன்றைக்கூட வெளியிடவில்லை.

எனவே இப்படிப் பல காரணங்களால் வளர்த்தெடுக்கப்பட்ட இனவாதம் 83 ஜூலை 23ம் திகதி திருநெல்வேலியில் 13 இராணுவத்தினரின் படுகொலையைத் தொடர்ந்து இனப்படுகொலை உச்ச நிலையை அடையத்தொடங்கியது. ஜூலை 23 தொடக்கம் ஒகஸ்ட் 10 வரை 316 பேர் கொல்லப்பட்டதாகவும் ஜூலை 23 தொடக்கம் 29 வரை 1321 வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டதாகவும், 72 கொள்ளைச் சம்பவங்கள் நடைபெற்றதாகவ்ும், 281 துன்புறுத்தல் சம்பவங்களும் 84 வேறு சம்பவங்களும் நடந்ததுடன் 79,000 பேர் அகதிகளானார்கள் எனவும் அரசு தெரிவித்தது.


தொடர்ந்து இவ்வாறு நாடு முழுவதும் நடந்த இச்சம்பவங்கள் அரசு கூறிய தகவல்களையும் விட அதிகமாக நடந்துள்ளன என்பதனை உறுதிப்படுத்தின.

பல கோயில்கள் சேதமாக்கப்பட்டன. பூசகர்கள் குத்தப்பட்டும், வெட்டப்பட்டும், தீயிட்டும் கொல்லப்பட்டார்கள். சில இட்ங்களில் தேர்கள் கொழுத்தப்பட்டன. பல தமிழ்ப் பெண்கள் பலாத்காரம் செய்யப்பட்டனர். இந்த சம்பவங்களைத் தொடர்ந்து வீதியில் தமிழ்ப் பெண்கள் பொட்டு வைத்து செல்வது கூட தவிர்க்கப்பட்டது.

மேலும் சம்பவங்கள் நடந்து கொண்டிருந்த போது நாட்டின் ஜனாதிபதி "உணர்ச்சி வசப்பட்ட ஒரு இனத்தின் வெளிப்பாடு" என இதனை வர்ணித்திருந்தார். ஜூலை 30 ம் திகதி நாட்டு மக்களுக்கு பிரதம மந்திரி ஆர்.பிரேமதாச வானொலியில் ஆற்றிய உரையில் எங்கள் அரசாங்கத்தினால் நாட்டை பாதுகாக்க முடியும் இன்னொரு அரசை அமைக்கவோ நாட்டை பிளவுபடுத்தவோ இதன் பிறகு யாரும் பேச முடியாது. அவ்வாறு செய்வோருக்கு குடியியல் உரிமை பறிக்கப்படும், அவ்வாறு செய்யும் அமைப்புக்களுக்கு தடை விதிக்கப்படும்" என தமிழர்களின் குரலை அடக்க முயற்சித்தாரே ஒழிய சிங்கள இனவாதத்தையும் அநியாயமான படுகொலைகளையும் கண்டிக்கவில்லை. காமினி திசாநாயக்கா "பல அரச சொத்துக்களை இராணுவத்தினரை, கட்சியினரை, பொலிசாரினை கொன்ற போது சிந்திக்க ஆரம்பித்தவர்கள் இவற்றுக்கு முடிவில்லையா என்ற ஒரு சந்தர்ப்பத்திலேயே 83 ஜூலை கலவரம் தொடங்கியது" என தினமின 83 ஒகஸ்ட் 4ம் திகதி பத்திரிகையில் தமிழ் படுகொலையை நியாயப்படுத்தியிருந்தார். இதன் மூலம் அவர் அதனை தமிழ் மக்கள் மீதான பயங்கரவாத படுகொலை என்பதை மறுத்ததுடன் அதன் உணர்ச்சி வசப்பட்டவர்களின் வெளிப்பாடென்றே கூற முற்பட்டார். அதே தினத்தில் லலித் அத்துலத்முதலி "சிங்களவர் நமக்கென்று வேறு ஒரு நாடு இல்லை என்பதை மறந்து விடக்கூடாது. நாடு பிளவுபடுவதை அனுமதிக்க முடியாது


→ 11

## கறுத்த ஜூலை 83



இரு கரைகளிலும் மக்களைக் கூட்டி
எழுபத்தொன்று ஏப்பிரல் மாதம்
நதியில் ஊர்வலம் சென்றன பிணங்கள்;
இளமைமாருத சிங்களப் பிணங்கள்.
எழுபத்தேழின் கறுத்த ஆகஸ்டில்
குடும்பம் குடும்பமாய் மிதந்து
புலம் பெயர்ந்தவைகள் செந்தமிழ்ப் பிணங்கள்
(அதன் பின்னர்கூட இது நிகழ்ந்துள்ளதாம்)
இப்படி இப்படி எத்தனைபுதினம்
நேற்றுஎன் முஸ்லிம் நண்பர்கள் கூறினர்.
வாய்மொழி இழந்த பிணங்களில் கூட
தமிழன் சிங்களன் தடயங்கள் உண்டோ!
கும்பி மணலுடன் கரையை நோக்கி
படகு ஒன்று தள்ளப்பட்டது.
எதிர்ப்புறமாக மரமேடையிலும் ஆற்றங்கரையிலும்
குளிப்பும் துவைப்புமாய்
முஸ்லிம் பெண்களின் தீந்தமிழ் ஒலித்தது.
பின்புற வீதியில்
வெண்தொப்பி படுதா மாணவமணிகளின்
இனிய மதலைத் தமிழ்கள் கடந்தன.
காலைத் தொழுகை முடிந்தும் முடியாதும்
மசூதியிலிருந்து இறங்கிய மனிதர்கள்
என்னை அழைத்தனர்,
"கலவரம்" என்று கலவரப்பட்டனர்.
இலங்கையில் கலவரம் என்பதன் அர்த்தம்
நிராயுதபாணி தமிழ் குடும்பங்களை
சிங்களக் காடையும் படையும் தாக்குதல்.
சிலசில வேளை முஸ்லிம்களுக்கும்
இது நிகழ்ந்திடலாம்.
தமிழரின் உடைமை எரியும் தீயில்
தமிழரைப் பிளந்து விறகாய் வீசும்
அணுயுகக் காட்டு மிராண்டிகள் செய்யும்
கொடுமைகள் தன்னை எடுத்துச் சொல்லினர்
பருந்தின் கொடுநிழல் தோய்ந்திடும் கணத்தில்
தாயின் அண்மையைத்
தேடிடும் கோழிக் குஞ்சாய்த் தவித்தேன்.

வ. ஐ. ச. ஜெயபாலன்



## யதில்


"ஆறுமணிச் செய்தி —
முடிகையிலேதான் கேட்டேன்,
பூமி பிளந்து
என்னையே விழுங்குவதாய்
உணர்வு வந்தது.

முகமறிந்த சிலரதும்,
முகமறியாப் பலரதுமாய்
ஐம்பத்து நால்வரின்
நினைவும் முகிழ்த்தது.....

ஒளிமிகுந்த நாட்களை
எமது மண்ணில் நிறுவ
துயர் மிகுந்த நாட்களை
உறுதியோடு கடந்தீர்......

"விடுதலை பெறும் எனது நாட்டை
பார்க்க அந்தகன் ஒருவனுக்கு
அளியுங்கள் விழிகளை......"
அந்நிய நீதிமன்றில் முழங்கினீர்கள்
தோழர் காள்!

நா. சபேசன்



## புத்தனின் நிர்வாணம்

போதி மரத்தின் கீழ்
அன்று ஒரு நாள்
மூடிய விழிகளைத்
திறந்தான் புத்தன்.

கால்களை நனைத்தது
குருதி ஆறு.
அவனது தத்துவம்
கிடந்து தவித்தது.

அதிர்ந்து.
எழுந்து.
ஓடினான்.

காற்றாய், கடலாய்,
திசைகள் தோறும்...
எங்கேயேனும் அவனது ஞானம்
ஒரு துளியாவது...?
தார்மீக உலகில்
கால்கள் பதிக்க
விரும்பாத மனதுடன்

உலகை வெறுத்துப்
போதி மரத்தில்
தூக்குப் போட்டுச்
செத்தான் புத்தன்.

பரிநிர்வாணமாய்...


ஹம்சத்வனி

## 52*

சற்றே விலகி
நந்தி வழி விட்டதுபோல்
வெலிக்கடையின் சிறைக்கூட
இருப்பு நெடுங்கதவம்
தானே திறக்கும்
அங்கே
காவலர்கள் அறியாமல்
கற்சுவர்கள் சூழ்கின்ற
அறைகட்குள் கொலை நடக்கும்

பகுத்தறிவு ஆளுகிற
புதிய யுகம்
அற்புதங்கள்
ஒருக்காலோ நடந்தாலோ
ஒப்பார்கள் என்பதனால்
இருகால் நடந்தேறும்
கண்டு அலுத்த
கற்சுவரோ மௌனிக்கும்.

சி. சிவசேகரம்



## எல்லாவற்றையும் மறந்துவிடலாம்.....

எல்லாவற்றையும் மறந்து விடலாம்;
இந்தப் பாழும் உயிரை வெறுதது
அநாதரவாக இழப்பதை தெரிந்த
இருகணப் பொழுதில் இதயமும்
நம்பிக்கையோடு
'தாலி' வீதியில்
இசைகளும், இசைகளோடு
குலுங்க விரைந்தபோது,
கவிழ்க்கப்பட்டு எரிந்த காரில்
வெளியே தெரிந்த தொடை எலும்பை,
ஆகாயத்திற்கும் பூமிக்குமிடையில்
எங்கோ ஒரு புள்ளியில் நிலைத்து
இறுகிப்போன ஒரு விழியை,
விழியே இல்லாமல், விழியின் குழிக்குள்
உறைந்திருந்த குருதியை,
'டிக்மண்ட்ஸ்' ரோட்டில்
கலைக் கறுப்புகளுக்குப் பதில்

சேரன்

நன்றி - நூலகத்திட்டம்



வடகிழக்கில் வாழ்கின்ற

# இந்திய வம்சாவளியினரை இலங்கைத் தமிழர் என ஏற்பார்களா?

- பாஷா

'மலையகத் தேசியம்' தொடர்பான கருத்தாடலாக இப்பகுதி அமைகிறது. ஏற்கனவே இது தொடர்பாக மலையகனும், இ.தம்பையா அவர்களும் தங்கள் அபிப்பிராயங்களை முன்வைத்திருக்கிறார்கள்.
இம்முறை பாஷா இதுபற்றி எழுதுகிறார். இது தொடர்பான கருத்துக்கள் மேலும் வரவேற்கப்படுகின்றன.

சரிநிகர் பங்குனி இதழில் மலையக தேசியம் தொடர்பாக ''மலையகனால்'' எழுதப்பட்ட கட்டுரைக்குப் பதிலளிக்கும் முகமாக புதிய ஜனநாயக கட்சியின் தேசிய அமைப்பாளர் இ.தம்பையா அவர்கள் எழுதிய கட்டுரைக்கு எதிராக மீண்டும் ''மலையகன்'' சரிநிகர் ஜூன் இதழில் இந்திய வம்சாளியினரை ஒரே தேசியத்துள் இணைத்து விட முடியாது என வாதித்துள்ளார். அவர் வைத்துள்ள முதலாவது கருத்தே மக்களை குழப்பத்துக்குள்ளாக்க கூடிய பழைய பாரம்பரிய இடது சாரி கட்சியின் கண்ணோட்டம் என்பது ஏற்றுக்கொள்ள முடியாத விடயம். ஏனெனில் இது ஒரு சித்தாந்தம் தழுவிய பிரச்சினையாகவும் கட்சியின் அதாவது புதிய ஜனநாயக கட்சியின் ஆரம்பகால வரலாற்றினை படிக்க வேண்டிய விடயமாகவும் இருக்கிறது. எனவே இது ஆராய்ந்து பார்க்க வேண்டிய விடயமாகும்.

மலையகத்தோடு தொடர்புடைய ஏனைய இடங்கள் தவிர நகர்புறங்களிலும் வடமேல் பகுதிகளிலும் வாழ்கின்ற தொழிலாளர்களை மலையகத்தோடு இணைத்து விட முடியாது என எழுதியுள்ளார். எனவே ''மலையகன்'' கூறும் மலையகத்தோடு தொடர்புடைய ஏனைய இடங்கள் எவை? நாடு, மாகாணம், மாவட்டம், பிரதேசம் இவற்றின் உள்ளும் புறமும் உள்ள உண்மையான நிலைமைகளில் இருந்துதான் நாம் எந்தப் பிரச்சினையையும் அணுக வேண்டும். ஆகவே மலையகம் என்பது ஒரு வரையறுக்கப்பட்ட புவியியல் எல்லையைக் கொண்டது. மலையக மக்கள் எங்கு வாழ்ந்தாலும் அவர்களுடைய தன்னடையாளங்கள் இந்திய வம்சாளியினர் என்பதே. எனவே கொழும்பு, நீர்கொழும்பு, உடப்பு, சிலாபம் போன்ற பகுதிகளில் வாழ்கின்ற மக்களையும் நாட்டில் ஏற்பட்ட குழப்பங்கள் காரணமாக மலையகத்தில் இருந்து இடம் பெயர்ந்து வட கிழக்கு பகுதிக்கு இடம் பெயர்ந்த மக்களையும் எந்த தேசியத்துள் இணைப்பது? வட கிழக்கில் வாழ்கின்ற இலங்கை வாழ் இந்திய வம்சாளியினரை அங்கு வாழ்கின்ற மக்கள் இலங்கைத்தமிழர்கள் என்று ஏற்றுக் கொள்வார்களா? அரசு அனுமதிக்குமா?

கொழும்பு உட்பட வட்மேல் மாகாண பகுதிகளில் வாழ்கின்ற மக்களுக்கு இருக்கின்ற வரலாற்று பாரம் பரியங்கள் என்ன? அவர்களுக்குரிய தனித்துவமான பிரச்சினைகள் எவை? இந்த மக்களுக்கு மலையகம் பற்றி எதுவும் தெரியாது மலையகம் பற்றி அவர்களுக்கு அக்கறையும் கிடையாது என குறிப்பிடுவது அம் மக்களை இழிவுபடுத்துவதாகவும் மலையக மக்களிலிருந்தும் வட கிழக்கு வாழ் மக்களிலிருந்தும் தனிமைப்படுத்துவதாகவும் மேலோட்டமான அறிவில் திருப்தி அடைவதுமாகவுமே அமையும்.

இவர்கள் ஒரு தேசியத்துள் வர விரும்புவதும் விரும்பாததும் இந்த மக்களே தீர்மானிக்க வேண்டிய விடயம். பிரச்சினைகளை தீர்ப்பதற்கான வழிமுறைகளில் ஜனநாயக முறை, கலந்துரையாடல் முறை, விமர்சன முறை, இணங்க செய்வது, போதனையளிப்பது போன்ற முறைகளைப் பயன்படுத்தலாம். இவை பலாத்காரம் அல்ல. அடக்கு முறையுமல்ல. வடமேல் மாகாண தமிழ் மக்கள் சம்பந்தமாக அவர்களுக்கு தனியான பிரச்சினை இருப்பதாகவும், நீண்ட வரலாற்றுப் பாரம்பரியம் இருப்பதாகவும் அவர்களை மலையக தேசியத்துள் இணைத்துவிட முடியாது எனவும் திட்ட வட்டமாக கூறும் ''மலையகன்'' வடகிழக்கு அல்லாத தமிழ் மக்கள் தொடர்பான பிரச்சினை தீர்வு ஆய்வுக்குரியது என குறிப்பிட்டுள்ளார். எனவே இவர் மக்களுக்கு என்ன சொல்கிறார்? வடமேல் மாகாண தமிழர்களையும் வடகிழக்கு அல்லாத தமிழர்களையும் எந்த தேசியத்துள் இணைக்கலாம்?

மலையக மக்களின் பிரச்சினை ஒரு தேசிய இனப் பிரச்சினையாம். இவர்கள் தேசிய இனமாக அங்கீகரிக்கப்பட்டு விட்டனரா? இவர் மக்கள் முன் வைத்துள்ள நிர்வாக அலகு எவ்வகையானது? மக்களின் பிரச்சினையை எவ்வாறு தீர்க்க முடியும்? மலையகன் பதில் சொல்வாரா?

மலையக

# தமிழருக்கு தண்ணீர் தேவையில்லையோ!

மலையக மக்கள் குடிநீர் தேவைக்கும், பயிர்ச்செய்கைக்கும் பயன்படுத்தி வந்த நீர் வழிமறிக்கப்பட்டு சிங்கள மக்களுக்கு மட்டும் வழங்கப்பட்டுவருகிறது. பதுளை, ஹாலி-எல, ரொக்கத்தன போன்ற பதுளை மாவட்டப்பிரதேசங்களில் மலையிலிருந்து வாய்க்கால் வழிவரும் நீர் இடையில் தாங்கிகள் அமைக்கப்பட்டு வழிமறிக்கப்பட்டு சிங்கள கிராமப் புறங்களுக்கு மட்டும் திருப்பி விடப்பட்டுள்ளது.

அமைக்கப்பட்ட தாங்கிகள் கூட காலம்காலமாக மலையக மக்கள் பயிர்செய்துவந்த நிலங்களிலேயே அமைக்கப்பட்டுள்ளன. இதற்காக அவர்களது நிலங்கள் பறிக்கப்பட்டுள்ளன.

இந்த நீர்ப்பறிப்பினதும், நிலப்பறிப்பினதும் பின்னணியில் பதுளை உதவி அரசாங்க அதிபரே இருந்ததாகத் தெரியவருகிறது.

குடியேற்றம், காணிப்பறிப்பு என்பவற்றுடன் தற்போது நீர்ப்பறிப்பிற்கும் உள்ளாகியிருக்கிறார்கள் மலையகமக்கள்.

அரசினால் நியமிக்கப்பட்ட உதவி அரசாங்க அதிபரின் இந்நடவடிக்கை ஏதுவும் இல்லாத மலையக மக்களுக்கு இதுவும் தேவையில்லை என்று நினைத்தாற் போலிருக்கிறது இந்த நீர்ப்பறிப்பு.

# மலையகக் குறிப்பேடு

## ஏகப் பிரதிநிதியா? ஏலப் பிரதிநிதியா?

மாகாணசபைத் தேர்தலின் பெறுபேறுகளைத் தொடர்ந்து வட-கிழக்கு மாகாணங்களுக்கு வெளியில் வாழும் தமிழர்களின் ஏகப்பிரதிநிதி இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் (இ.தொ.கா) தான் என அதன் செயலாளர் செல்லச்சாமி உரிமை கோரியுள்ளார்.

எனினும் சமூக,பொருளாதாரத் துறையில் மிகவும் பின்தங்கியுள்ள மலையக மக்களின் தனித்துவத்தையும், சமூகப் பொருளாதாரச் சமத்துவங்களையும் அடைவதற்கும், நாட்டில் நிலைநாட்டப்பட்டுள்ள பேரினவாத அடக்குமுறை அரசியல் நடவடிக்கைகளினால் ஏற்படும் பாதிப்புகளிலிருந்து மலையக மக்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கும் இவர்கள் எந்தவகையில் செயற்பட்டுள்ளார்கள் என்பது கேள்விக்குரிய விடயமாகும்.

கடந்த மாகாணசபைகளை எடுத்துக் கொண்டால் வட-கிழக்கு மாகாணசபை மட்டுமே எதிர்க்கட்சியின் கட்டுப்பாட்டில் இருந்தது. எனினும் அம்மாகாண சபை முறையான அதிகாரப் பங்கை கோரியதன் விளைவாக ஜனாதிபதி பிரேமதாசாவினால் கலைக்கப்பட்டுவிட்டது. ஏனைய ஏழு மாகாணசபைகளும் ஐ.தே.க வின் கட்டுப்பாட்டில் இருந்ததினால், அதிகாரப் பங்கீட்டிற்கு எதிராக செயற்பட்டு வந்த ஐ.தே.க. அரசாங்கத்திடமிருந்து முறையான அதிகாரங்களைப் பெற்றுக்கொள்ளும் முயற்சிகள் எதுவும் நடக்காமலே போய்விட்டது. இ.தொ.காங்கிரஸ் அம்மாகாணசபைகளில் ஐ.தே.கட்சியுடன் சோந்திருந்தாலும் அவர்கள் மாகாண சபைகள் அமைக்கப்பட்டதன் பிரதான நோக்கமான இனவாத முரண்பாட்டைத் தீர்ப்பதற்கான வழிமுறைகளில் செயற்படத் தவறிவிட்டார்கள். மாறாக பல்வேறு சந்தர்ப்பங்களிலும் மலையக மக்களின் எதிர்பார்ப்புகளுக்கு எதிராக செயற்பட்டு ஐ.தே. கட்சியின் பேரினவாத செயற்பாடுகளைப் பாதுகாப்பதன் மூலம் தமது உறுப்பினர் பதவிகளையும், அதன்மூலம் கிடைக்கின்ற சலுகைகளையும் பாதுகாத்துக் கொள்வதில் கண்ணும் கருத்துமாக இருந்து செயற்பட்ட பல சம்பவங்கள் நடந்துள்ளன.

உதாரணமாக, தமிழ்மக்கள் செறிவாக வாழும் மத்திய மாகாண சபையில் ஆளுநரினால் முன்வைக்கப்பட்ட முதலாவது கொள்கை விளக்க உரையில் மலையக மக்களின் பிரச்சினைகள், இன உறவுகள் போன்ற விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அத்தருணத்தில் எதிரணியில் இருந்த ஐக்கிய சோஷலிஸ கூட்டணியினர் ஆளுநரின் உரைக்கான ஏழு திருத்தப் பிரேரணைகளை முன் மொழிந்தனர். அவற்றில் பின்வரும் இரண்டு திருத்தப் பிரேரணைகள் மலையக மக்களின் நலன்களுடன் நேரடியாகத் தொடர்புபட்டவையாகும்.

முதலாவது, மத்திய மாகாணத்தில் வாழும் தோட்டத் தொழிலாளர்கள் எதிர்நோக்கும் விசேட பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பது தொடர்பாக ஆளுநரினால் எந்தவித கொள்கைப் பிரகடனமும் செய்யப்படவில்லை. எனவே இது தொடர்பான கொள்கை நிலைப்பாடு ஆளுநர் உரையில் உள்ளடக்கப்படல் வேண்டும் என்பதாகும்.

இரண்டாவது, பல இன மக்கள் செறிவாக வாழும் மத்திய மாகாணத்தில் இனங்களுக்கிடையில் ஐக்கியத்தையும், புரிந்துணர்வையும் ஏற்படுத்துவது தொடர்பான எவ்வித நிலைப்பாடுகள் பற்றிய கொள்கைகளும் ஆளுநரினால் பிரகடனப்படுத்தப்படவில்லை. எனவே இதுவும் உள்ளடக்கப்படல் வேண்டும் என்பதாகும்.

மேலே குறிக்கப்பட்ட இரு பிரேரணைகள் உட்பட எல்லாப் பிரேரணைகளும் தனித்தனியே வாக்களிப்பிற்கு விடப்பட்டபோது எல்லாப் பிரேரணைகளையும் அவற்றின் நன்மை தீமைகள் கருதாமல் இ. தொ. கா கட்சியினர் ஐ.தே.க வினருடன் சேர்ந்து எதிர்த்தே வாக்களித்தனர். இதன் மூலம் ஆளும் கட்சியைச் சேர்ந்த எல்லாத் தமிழ் உறுப்பினர்களும் மத்திய மாகாணசபையில் பேரினவாத ஆதிக்கத்தைப் பேணிப் பாதுகாப்பதற்கான தமது ஒத்துழைப்பை வழங்கினர். இதில் ஒரு விசேட சம்பவம் என்னவென்றால், மலையக மக்களின் பிரச்சினை பற்றிய பிரேரணை முன் வைக்கப்பட்ட போது அதைத் தடுத்து நிறுத்தும் நோக்கில் இடைவிடாது குறுக்கீடு செய்த இ.தொ.கா வின் வயது முதிர்ந்த உறுப்பினர் ஒருவர் வாக்கெடுப்பின் போது அப்பிரேரணைக்கு எதிராக தனது இருகைகளையும் உயர்த்தி வாக்களித்த சம்பவம் அன்று பல பத்திரிகைகளிலும் கண்டிக்கப்பட்டதென்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

எதிரணியினர் முன்வைக்கும் பிரேரணைகளை எதிர்த்து வாக்களிப்பது ஆளும்கட்சியினரின் சம்பிரதாயம் என்று கொள்வோமானால் இ.தொ.கா வினர் செய்தது சரியெனக் கொள்ளலாம். ஆனால், அதன் பின்பாவது மலையக மக்களினதோ அல்லது இனவாதப் பிரச்சினைக்கான தீர்வை நோக்கியோ மாகாண சபையை செயற்படுத்த இவர்கள் எவ்வித முயற்சியையும் செய்ய முன்வரவில்லை. மத்திய மாகாணசபையை ஐ.தே.கட்சி கைப்பற்றுவதற்குக் காரணமாக அமைந்ததே மலையக மக்களின் வாக்குகள் தான். எனினும் இம்மாகாண சபையின் அபிவிருத்தி நடவடிக்கைகளில் தொடர்ச்சியாக மலையக மக்கள் புறக்கணிக்கப்பட்டே வந்துள்ளனர்.

- மலைஞானி

நன்றி - நூலகத்திட்டம்



# தேசிய விடுதலைப் போராட்டம் ஓர் மீளாய்வை நோக்கி.... - 17

# "ஈழவிடுதலையில் எமக்கும் பங்கு வேண்டும் இயக்கங்கள் அதனை ஏற்க வேண்டும்"

அன்ன பூரணா

"தமிழ் ஈழ விடுதலையில் எமக்கும் பங்கு வேண்டும். ஈழ இயக்கங்கள் அதனை ஏற்க வேண்டும்" என்ற பாடல் வரிகள் 1983க்கு பின்னர் யாழ்குடா நாட்டில் உள்ள வறிய கூலி விவசாயிகள் வாழ்கின்ற கிராமங்கள் எல்லாம் மக்களைத் தட்டி எழுப்புகின்ற வரிகளாக இருந்தன. வறிய கூலி விவசாயிகள் மத்தியில் தொழிற்சங்கப் பணிபுரிந்த கிராமிய உழைப்பாளர் சங்கத்தினால் மேடையேற்றப்பட்ட "சிந்திக்கத் தொடங்கி விட்டார்கள்" என்ற நாடகத்தில் வெளிவந்த வரிகளே அவை. இச்சிந்திக்கத் தொடங்கி விட்டார்கள் நாடகம் வறிய கூலி விவசாயிகளின் பிரச்சனைகளை மையமாக வைத்து எழுதப்பட்டது. 1980களில் இந்நாடகம் மேடையேற்றப்பட்ட போது வறிய கூலி விவசாயிகளின் பிரச்சனைகளை மட்டும் வெளிப்படுத்துவதாக இருந்தது. 1983இன் பின்னர் அதனை மீளவும் மேடையேற்றிய போது வறிய கூலி விவசாயிகளின் பிரச்சினையை தேசிய இனப்பிரச்சினையோடு இணைத்திருந்தது. தேசிய இனப் பிரச்சினைக்கு தீர்வு காணும் போது அத் தீர்வு வறிய கூலி விவசாயிகளின் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண்பதாக அமைய வேண்டும் என்பதனை வலியுறுத்தும் வகையில் அமைத்திருந்தார்கள். இந்நாடகம் சாதியால் தாழ்த்தப்பட்ட மக்களை பெரும்பான்மையாகக் கொண்ட வறிய கூலி விவசாயிகளை உணர்வூரீதியாக தேசிய விடுதலைப் போராட்டத்தில் பங்கு பற்றச் செய்ததோடு, அவர்களின் பிரச்சினைகளில் விடுதலை இயக்கங்கள் அக்கறை கொள்ள வேண்டிய சூழ்நிலையையும் தோற்றுவித்தது.

இந்நாடகத்தைப் பற்றியும் அதனை மேடையேற்றிய கிராமிய உழைப்பாளர் சங்கத்தின் பணிகளைப் பற்றியும் ஆராய்வதற்கு முன்னர் வறிய கூலி விவசாயிகள் என்போர் யார்? அவர்களின் பிரச்சினைகள் என்ன? அவர்கள் மத்தியில் ஆதிக்கம் செலுத்திய அரசியல் சக்திகள் யார்? யார்? என்பதை சுருக்கமாக அறிதல் அவசியமானதாகும்.

வறிய கூலி விவசாயிகள் என்போர் யாழ் குடாநாட்டு செம்மண் பிரதேசங்களில் மிகவும் அடிமட்டத்தில் வாழ்கின்ற மக்கள் பிரிவினராவர். இவர்களில் வறிய விவசாயிகள் என்போர் மிகவும் சிறிய நிலப்பரப்பில் யாழ்ப்பாண விவசாயிகளின் வார்த்தைகளில் சொல்வதானால் ஆயிரம் கன்றுக்கு குறைவான நிலப்பரப்பில் சொந்தமாக விவசாயம் செய்வதுடன் கூலி உழைப்பிலும் ஈடுபடும் பிரிவினராவர். கூலி விவசாயிகள் என்போர் மண்வெட்டியை மட்டும் சொந்த உடமையாகக் கொண்டு கூலி உழைப்பில் ஈடுபடும் விவசாயிகள் ஆவர். இவர்களில் பெரும்பான்மையோர் ஏறத்தாழ 95% தினர் சாதியால் தாழ்த்தப்பட்ட பள்ளர், நளவர் சமூகத்தை சேர்ந்தவர்களாகவே விளங்கினர். இவர்கள் அடிமட்டத்தை சேர்ந்தவர்களாக இருந்தமையினால் வர்க்கரீதியான ஒடுக்குமுறைக்கு முகம் கொடுத்த அதே வேளை தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்தவர்களாக இருந்தமையினால் சாதி ஒடுக்கு முறைக்கும் முகம் கொடுக்க வேண்டி இருந்தார்கள். சில இடங்களில் வர்க்க ஒடுக்கு முறையை விட சாதி ஒடுக்கு முறைக்கே அதிகளவில் முகம் கொடுக்கவேண்டியிருந்தது. குடியிருப்புப் பிரச்சினை இவர்களுக்கு பெரிய பிரச்சினையாக இருந்தது. இவர்களில் கணிசமானவர்கள் உயர்வேளாள சாதியினரின் நிலங்களிலேயே குடியிருந்தனர். ஏனையவர்கள் கிராமங்களுக்கு புறம்போக்காக காணப்பட்ட கலட்டுத்தரைகளிலும் மயானத்தை தாண்டிய இடங்களிலும் குடியிருந்தனர். இவர்களுடைய குடியிருப்புகளுக்கு ஒழுங்கான போக்குவரத்துப்பாதை கிடையாது. மின்சாரம் கிடையாது. படிக்கும் மாணவர்களுக்கு ஒழுங்கான பாடசாலை கிடையாது. பெயருக்கு என இருக்கும் பாடசாலைகளில் கூட ஒழுங்கான கட்டிட வசதிகளோ, தளபாட வசதிகளோ கிடையாது. ஆசிரியர்களும் போதிய வகையில் இல்லை. இருக்கிறவர்களும் உயர்சாதியைச் சேர்ந்தவர்களானபடியால் கற்பிப்பதில் போதிய அக்கறை செலுத்துவதில்லை. கோவில்கள் இவர்களை அனுமதிப்பதில்லை. நுணுக்கமாக அவதானிப்போமாயின் வெளியே தெரிகின்ற யாழ்ப்பாண சமூகத்திற்குப் புறம்பாக வெளியே அதிகளவில் தெரியாத இருண்ட சமூகமாக இவர்கள் விளங்கினர்.

இவ்விருண்ட சமூகத்தில் அரசியல் பணியாற்றி ஆரம்பத்தில் கொஞ்சமாவது இம்மக்களை விழிப்படையச் செய்தவர்கள் சண்முகதாசன் தலைமையிலான சீனசார்பு கம்யூனிஸ்ட் கட்சியினரேயாவர். 1960 களில் நடைபெற்ற சாதிப்போராட்டங்களுக்கு இவர்களே தலைமை தாங்கினர். இம்மக்கள் தங்கள் ஒடுக்குமுறைக்கு எதிராக வன்முறையை பயன்படுத்த ஆரம்பித்த பின்னரே உயர் வேளாளரின் கட்டுப்பாட்டில் இருந்த ஆலயங்கள் இவர்களுக்கும் திறக்கப்பட்டன. பாடசாலைகளில் அனுமதி அளிக்கப்பட்டன. தேனீர்க்கடைகளில் சம உரிமை வழங்கப்பட்டது.

இச்சீனசார்பு கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் பணிகளின் தொடர்ச்சியாகவே அக்கட்சியிலிருந்து வெளியேறிய குழுவினரால் கிராமிய உழைப்பாளர் சங்கம் தோற்றுவிக்கப்பட்டது. கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து வெளியேறிய கௌரிகாந்தன் பாலசிங்கம் சின்னராசா போன்றவர்கள் வேறு சிலரையும் சேர்த்து 1980 களின் பிற்பகுதியில் இச்சங்கத்தை தோற்றுவித்தனர். இவர்களோடு சேர்த்தவர்களில் சிறீதரன், மகாலிங்கம், தங்கராசா, ஜெகநாதன், யோதிலிங்கம், ஜீவரத்தினம் ஆகியோர் முக்கியமானவர்களாக விளங்கினர். கௌரிகாந்தன் இதன் செயலாளராகவிருந்தார். இவர்கள் தேசிய இனப்பிரச்சினையில் அக்கறை செலுத்தாததோடு தமிழ்மக்களின் பிரிந்துபோதலுடன் கூடிய சுயநிர்ணய உரிமையையும் ஏற்றுக்கொள்ளாததினால் ஜோதிலிங்கம், ஜீவரத்தினம் போன்றோர் சங்கத்தை விட்டு வெளியேறினர்.

இச்சங்கத்தைச் சேர்ந்தவர்கள் நடைமுறையில் தங்கள் வேலைகளை நகர்த்த ஆரம்பித்தபோது கூர்மையடைந்து வந்த தேசிய இனப்பிரச்சினை தொடர்பான கேள்விகளுக்கு பதில் அளிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அமைப்பிற்குள்ளும் தேசிய இனப் பிரச்சினை தொடர்பான கேள்விகள் காரசாரமாக எழுந்தன. 1983 இனக்கலவரத்தைத் தொடர்ந்து தேசிய எழுச்சி ஏற்பட்டபோது தேசிய இனப்பிரச்சினை தொடர்பான கேள்விகள் மேலும் எழுந்தன. இதனால் இவர்கள் அமைப்புக்குள் காரசாரமான விவாதத்தை நடாத்தினர். விவாதத்தின் முடிவில் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு பிரிந்து போதலுடன் கூடிய சுயநிர்ணய உரிமையே என்ற முடிவுக்கு வந்தனர். ஆனால் தேசிய இனவிடுதலை என்பது அதற்குள் அடங்கும் வறிய கூலி விவசாயிகளின் விடுதலைக்கும் வழிசமைப்பதாக இருக்க வேண்டும் என வலியுறுத்தினர். இம்முறைகளின் அடிப்படையிலேயே சிந்திக்கத்தொடங்கி விட்டார்கள் என்ற தங்களது நாடகத்திலும் மாற்றங்களை செய்திருந்தனர்.

தேசிய விடுதலைக்காகப் போராட வேண்டும். வறிய கூலி விவசாயிகளையும் அப்போராட்டத்தில் பங்கு பெறச் செய்தல் வேண்டும் என இவர்கள் முடிவெடுத்த சமயத்தில் இவ்வமைப்பின் பொதுச்செயலாளராக இருந்த கௌரிகாந்தன், சிறீதரன் போன்றவர்கள் புளொட் இயக்கத்தில் சேர்ந்து கொண்டனர். ஜெகநாதன் ஈ.பி.ஆர்.எல்.எப் இல் சேர்ந்து கொண்டார். கௌரிகாந்தனின் வெளியேறுகைக்கு பின்னர் அமைப்பின் பொதுச்செயலாளராக மார்க்கண்டு தெரிவு செய்யப்பட்டார்.

தேசிய விடுதலைப் போராட்டத்தில் பங்கு பெற வேண்டும் என்ற முறைக்குப் பின்னர் தேசிய இனப் பிரச்சினைகளில் இவர்கள் அதிகளவு அக்கறை காட்டினர். வறிய கூலி விவசாயிகள் [illegible] கிராமங்களில் மாத்திரம் மேடையேற்றிய தமது "சிந்திக்கத் தொடங்கிவிட்டார்கள்" நாடகத்தினை சகல கிராமங்களிலும் மேடையேற்றும் முயற்சிகளில் ஈடுபட்டனர். இதன்மூலம் உயர்சாதியைச் சேர்ந்தவர்களும் வறிய கூலி விவசாயிகளின் பிரச்சினைகளை அறிவதற்கு வழி செய்ததோடு வறிய கூலி விவசாய மக்களுக்கும் தேசிய இனப்பிரச்சினையின் முக்கியத்துவத்தினை எடுத்துக் கூறினர். 1983 வரை தேசிய இனப்பிரச்சினைபற்றி அக்கறை கொள்ளாதிருந்த வறிய கூலி விவசாயிகள் 1983 இன் பின்னர் அலை அலையாக இயக்கங்களில் சேர்ந்து கொண்டனர் என்றால் இவர்களின் பங்களிப்பே அதற்கு பிரதான காரணமாக இருந்தது.

## ஸோலிங்கன்...

வதாகவும் பின்னர் அவர்கள் போத்தல்கள் கற்களுடன் திரும்பி வந்து தாக்க பொலிஸார் பின் வாங்குவதாகவும் மறுபடி இன்னும் கூடுதலான பொலிஸார் சேர்ந்து அவர்களைத் துரத்துவதாகவும் நேரம் போய்க் கொண்டிருந்து.

நிலமை கட்டுப்பாட்டுக்குள் இல்லை. அதனால் இத்துடன் இன்றைய இந்த எதிர்ப்பு நடவடிக்கைகளைப் பங்கு பற்றியவர்களுக்கு நன்றி கூறி முடித்து வைக்கின்றோம். என மேடையில் இருந்து அறிவிக்கப்பட்டது.

நாங்கள் அங்கிருந்து புறப்பட்டு வீட்டுக்கு வந்து ரீ.வீ யைப் போட்டால் செய்திகளில் புதுக்கதை சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

இன்று ஸோலிங்கனின் நடந்த ஊர்வலத்தின் போது அதில் பங்கு பற்றிய இடது சாரிப் பயங்கர வாதிகள் வேண்டுமென்றே குழப்பம் விளைவித்தனர். கடைகளின் கண்ணாடிகளை உடைத்தனர். ஊர்வலம் முடிந்த இடத்தில் மாறுபாடான கருத்துடைய குழுக்களைச் சேர்ந்த இரண்டு துருக்கியர் மோதிய போது அவர்களை தடுத்து நிறுத்த பொலிஸார் விரைந்தனர். அப்போது இடதுசாரி, வெளிநாட்டு வன்முறையாளர்கள் பொலிஸார் மீது கற்கள், போத்தல்களை வீசித் தாக்கினர். இதன் போது பல பொலிஸார் காயமடைந்தனர் என்ற செய்தியுடன் சில நாட்களுக்கு முன் சாம்பல் ஒநாய்கள் துருக்கிய இடதுசாரிகளைத் தாக்கிய படத்தை போட்டு அது இன்று நடந்ததாக காட்டிப் பின் கூட்டத்தினர் பொலிஸார் மீது கற்களையும் போத்தல்களையும் எறிவதை மட்டும் காட்டினார்கள். தொடர்ந்து செய்தியில் இது பற்றிக் கருத்துத் தெரிவித்த அரசாங்க பேச்சாளர் இவற்றைப் பார்த்துக் கொண்டு தாங்கள் பொறுமையாக இருக்க முடியாது என்றும் வன்முறையில் ஈடுபடும் வெளிநாட்டவர்கள் அவர்களுடைய நாட்டக் திருப்பியனுப்படுவார்கள் என்றும் மற்றவர்கள் மீது சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார். அத்துடன் இந்த நாட்டில் மீண்டும் இடதுசாரி பயங்கரவாதம் வளர்ந்து வருவதை சுட்டிக்காட்டி எச்சரித்ததுடன் இதனை எந்த வகையிலும் அனுமதிக்க முடியாது என்றும் கூறினார்.

ஸோலிங்கனில் கொலை செய்யப்பட்ட ஐந்து பெண்களைப் பற்றி இப்போது ஒன்றும் சொல்லக் காணோம்.


ஸோலிங்கன் கொலைகளின் பின் இரண்டு வாரங்களுக்கு நாடு முழுவதிலும் பரவலாக நியோ நாஸிகளால் வெளிநாட்டவர்களுடைய 70 வீடுகள் எரிக்கப்பட்டன. ஆனாலும் இது தொடர்பாக யாரும் கைதாகாததுடன் இச் சம்பவங்களுக்கு நாஸிகள் பொறுப்பில்லை என அரசு அறிவித்து வருகின்றது.

ஏ.பி.

நன்றி: தூண்டில்

# வெலிக்கடைக் கம்பிகளின் பின்னால்......

வெலிக்கடைச் சிறையில் ஜூலை 25ந் திகதி 35 பேரும், 27ந் திகதி 18 பேருமாக 53 பேர் கொல்லப்பட்டனர். அவர்களில் சிலர் பற்றி:



தங்கத்துரை:
ரெலோ இயக்கத்தின் தலைவராக இருந்தவர். இவர் தொண்டமனாற்றைச் சேர்ந்தவர். நீர்வேலி வங்கிக் கொள்ளை தொடர்பாகவே இவரும் கைதானார். **''நாம் வன்முறையின் மீது காதல் கொண்ட மன நோயாளர்கள் அல்ல''** என்கிற இவரது நீதிமன்ற உரை பிரசித்தமானது.

இராசகிளி
மூதூரைச் சேர்ந்தவர். ஈ.பி.ஆர்.எல்.எப் இன் அங்கத்தவர். சுற்றிவளைப்பின் போது கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்.

சிவானந்தராஜா
இவரும் மூதூரைச் சேர்ந்தவர். ஈ.பி.ஆர்.எல்.எப். இன் அங்கத்தவர். சுற்றிவளைப்பின்போது கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்.

ஜெகன்
ரெலோ இயக்கத்தைச் சேர்ந்தவர் அதன் சிரேஷ்ட உறுப்பினர். தொண்டமனாறு இவரது சொந்த ஊர். இவரும் நீர்வேலி வங்கிக் கொள்ளை தொடர்பாகவே சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர்.


ராஜேந்திரம்:
தமிழீழ மக்கள் விடுதலைக்கழகத்தில் இணைந்து செயலாற்றியவர் ஆரம்பகால உறுப்பினர். மிகச் சிறந்த சாரதி. 1981 நடைபெற்ற கிளிநொச்சி மக்கள் வங்கிக் கொள்ளை தொடர்பாகத் தேடப்பட்டு கைது செய்யப்பட்டவர். யாவருடனும் சுமூகமாகப் பழகக் கூடியவர்.

டொக்ரர் ராஜசுந்தரம்:
வைத்தியராக வவுனியா நகரில் பணிபுரிந்தவர். வவுனியாவில் இயங்கி வந்த காந்தீயத்தில் தன்னை இணைத்து அதன் செயலாளராகப் பணிபுரிந்தவர். அகதிகளை மீளக் குடியமர்த்தல், புனருத்தாரண வேலைகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். காந்தீயத்தின் முழுநேர ஊழியனாகத் தன்னை வெளிப்படுத்தினார். தமிழீழ மக்கள் விடுதலைக் கழக உறுப்பினர்களுக்குப் புகலிடம் கொடுத்தார் எனும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டார்.

அரபாத்:
தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் ஆரம்பகால உறுப்பினர். இவ்வமைப்பின் ஆரம்பகாலத் தாக்குதல்களில் பங்கேற்றவர். பாலஸ்தீனத்தில் இராணுவப் பயிற்சி பெற்றவர். வவுனியாவில் விமானப்படை வீரர் ஒருவரைக் கொலை செய்தது தொடர்பாக கைது செய்யப்பட்டவர்.

தேவகுமார்
அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த சவளக் கடையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். ஈரோஸ் இயக்கத்தின் சிரேஷ்ட உறுப்பினர். வெலிக்கடைச் சிறைப் படுகொலைகளின் போது கொல்லப்பட்டவர்.

பாஸ்கரன்
அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த பாண்டிருப்பு இவரது ஊர். இவரும் ஈரோஸ் இயக்கத்தின் சிரேஷ்ட உறுப்பினர். அதே சம்பவத்தில் கொல்லப்பட்டார்.



குட்டிமணி:
டெலோ இயக்கத்தின் தளபதியாக இருந்தவர். வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவர். நீர்வேலி வங்கிக் கொள்ளை தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர். தான் கொல்லப்பட நேர்ந்தாலும் தனது கண்களாவது பிறக்கப் போகும் தமிழீழத்தைப் பார்க்க வேண்டும் என்று தனது கண்களைத் தமிழர் ஒருவருக்குத் தானம் செய்யக் கோரியவர்.

- பீட்டர் -

# விமலதாசன் நினைவு

ஜூலை 83 இன அழிப்பு தென்னிலங்கையிலும், தென்னிலங்கைச் சிறைச்சாலைகளிலும் நூற்றுக்கணக்கான தமிழர்களை பலிகொண்ட அதேவேளை யாழ்ப்பாணத்திலும் பலரை பலிகொண்டது. அவ்வாறு யாழ்ப்பாணத்தில் பலிகொள்ளப்பட்டவர்களில் ஒருவர் தான் தேசிய விடுதலைப் போராளியும் மனிதன் பத்திரிகையின் பிரதம ஆசிரியருமான விமலதாசன் ஆவார்.

பண்டத்தரிப்பை பிறப்பிடமாகக் கொண்ட இவன் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பட்டதாரியுமாவான். ஜூலை 83 இன அழிப்பு நாளன்று பஸ் ஒன்றில் பயணம் செய்த போது சண்டிலிப்பாயில் வைத்து இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்டான்.

1977 இல் விமலதாசன் மனிதன் பத்திரிகையின் பிரதம ஆசிரியரானதோடு அதன் முக்கிய அமைப்பாளனாகவும் பொறுப்பேற்றுக் கொண்டான். இவன் பொறுப்பேற்ற பின்னரே மனிதன் இயக்கத்தினால் கிராமிய ஆய்வு, கல்விச் சேவை, உள்ளூர் உற்பத்தி முயற்சிகள் என்பன மேற்கொள்ளப்பட்டன. பின் தங்கிய தமிழ் மாவட்டங்களான மன்னார், வவுனியா போன்ற இடங்களில் பல்கலைக்கழக மாணவர்களைக்கொண்டு இலவசக்கல்விக் கருத்தரங்கும் நடாத்தப்பட்டது.
இலங்கை என்பது தமிழ் ஈழம் சிறீலங்கா என்ற இரு தேசங்களைக் கொண்டது என்பதை கொள்கை ரீதியாக நிறுவும் முயற்சியிலும் தீவிரமாக ஈடுபட்டான். இம்முயற்சியின் போது இடதுசாரிச் சக்திகளோடும், தென்னிலங்கை முற்போக்கு சக்திகளோடும் மூர்க்கத்தனமாக மோதினான். 1979ம் ஆண்டு இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கம் தோன்றிய போது அதன் முக்கிய உறுப்பினனாக சேர்ந்து கொண்டு தென்னிலங்கை சக்திகளுக்கு தமிழ்மக்களுக்குள்ள சுயநிர்ணய உரிமையை தெளிவுபடுத்தினான்.

ஒரு பழைய சைக்கிளில் தோளில் துணிப்பையுடன் மெலிந்த தோற்றத்தோடு குடாநாட்டு வீதிகளில் வலம் வரும் விமலதாசன் மறைந்து பத்து வருடமாகிறது. எனினும் தமிழ்த் தேசம் இருக்கும் வரை அவனை தேசத்து மக்களால் எளிதில் மறந்துவிடமுடியாது.

- பரந்தாமன்

# பஷீத்தின் கடிதமும் கட்டுரையின் இறுதிப்பகுதியும்

சரிநிகர் இதழ் 22 இல் ''முஸ்லிம்களின் அராபியப் பாரம்பரியம் ஒரு கற்பனைச் சக்தி'' என்ற தலைப்பிலான கட்டுரையொன்று வெளியாகியிருந்தது. இத்தலைப்பு சரிநிகரால் இடப்பட்டது. கட்டுரையாசிரியர் இட்ட தலைப்பு 'முஸ்லிம்களும் அராபியப் பாரம்பரியமும்' என்பதாகும்.
கூடவே அக்கட்டுரையின் இறுதிப்பகுதி 'கூறியது கூறலாக' அமைவதாகச் சரிநிகர் கருதியதால் பிரசுரமாகவில்லை. கட்டுரையின் உள்ளடக்கத்தைப் பொறுத்தவரை அப்பகுதி அவசியமானதெனவும், கட்டுரையாளர் தான் இட்ட தலைப்பே பொருத்தமானதெனவும் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார். அக்கடிதமும், கட்டுரையின் இறுதிப்பகுதியும் இங்கே பிரசுரமாகிறது.

ஆர்

ஆசிரியருக்கு,

தங்கள் பத்திரிகையின் பெப்ரவரி இதழில் பிரசுரிக்கப்பட்டிருக்கின்ற ''முஸ்லீம்களின் அராபியப் பாரம்பரியம் - ஒரு கற்பனைச் சக்தி'' என்ற தலைப்பிலான எனது கட்டுரை பற்றி, அதன் ஆசிரியன் என்ற வகையில் பின்வரும் விடயங்களைக் குறிப்பிட விரும்புகிறேன்.

(1) மேற்படி கட்டுரையின் தலைப்பு, நான் எழுதியனுப்பிய தலைப்பிலிருந்து மாறுபட்டிருக்கின்றது. நான் எழுதிய தலைப்பு ''இலங்கை முஸ்லீம்களும் அராபியப் பாரம்பரியமும்'' என்பதாகும்.

ஒரு பத்திரிகை ஆசிரியர் என்றவகையில் உங்கள் பத்திரிகையின் வாசகர்களினது ஆவலைத் தூண்டுகின்ற விதத்தில் ஆக்கங்களின் தலைப்புகளில் மாற்றம் செய்வதற்கு உங்களுக்கு உரிமை இருக்கின்றது. எனினும், எனது மேற்படி கட்டுரையின் உள்ளடக்கத்துடன் பொருந்தாத விதத்திலேயே உங்களது தலைப்பு மாற்றம் அமைந்திருக்கின்றது. இதனால் கட்டுரையைப் படிக்கின்ற வாசகர்கள், அதில் கூறப்பட்டுள்ள கருத்துக்களுக்கும், தலைப்பிற்கும் இடையிலான தொடர்பின்மையைக் கண்டு குழப்பமடையக் கூடும். எனவே அக்கட்டுரையின் தலைப்பு, ''இலங்கை முஸ்லீம்களும் அராபியப் பாரம்பரியமும்'' என்பதுதான் என வாசகர்களுக்குத் தெரியப்படுத்தும்படி கேட்டுக் கொள்கிறேன்.

(11) எனது மேற்படி கட்டுரையின் இறுதிப்பகுதி பிரசுரிக்கப்படாமல் விடுபட்டிருப்பதையும் உங்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பிரசுரிக்கப்படாதிருக்கின்ற அந்தப் பகுதி, கட்டுரையின் உள்ளடக்கத்தைப் பொறுத்தவரை மிக முக்கியமானது எனக் கருதுகிறேன். எனவே விடுபட்டிருக்கின்ற கட்டுரையின் இறுதிப்பகுதியை, தங்கள் பத்திரிகையின் அடுத்த இதழில் தவறாது பிரசுரிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி!
மருதூர் பஷீத்

தமிழ் மக்களின் உரிமைகள் விடயத்தில் சிங்கள இனவாதம் மேற்கொள்ளும் நிலைப்பாடுகள் இலங்கை முஸ்லீம்களுக்கு எச்சரிக்கை மிகுந்த போதனைகளை வழங்கியிருக்கின்றன. தமிழ்மக்களை ஒரு தனித்துவமான தேசமாக அங்கீகரிக்கவும், அவர்கள் வாழுகின்ற பாரம்பரியப் பிரதேசத்தில் அவர்களுக்குரிய உரிமைகளை வழங்கவும் தயாராக இல்லாத சிங்கள இனவாதம், முஸ்லீம்களின் விடயத்தில் வேறு விதமாக நடந்து கொள்ளும் என்று எதிர்பார்ப்பது அர்த்தமற்றது. உண்மையில் இன்று வரையிலான இலங்கை முஸ்லீம்களின் வரலாறு, சிங்கள இனவாதத்தினால் ஒடுக்கப்படுகின்ற அனுபவமாகவே அமைந்து வந்திருக்கின்றது.

எனவே அரசியல் ரீதியில் ''தமிழர்கள்''/''தமிழ்ப்பேசும் மக்கள்'' ''இஸ்லாமியத் தமிழர்கள்'' என்ற வரையறைக்குள் இருந்து விடுபட்டுவிட்ட இலங்கை முஸ்லீம்கள், இனி சிங்கள இனவாதத்திடமிருந்து தமது முழுஉரிமைகளையும் வென்று கொள்ள வேண்டிய கட்டத்தை அடைந்திருக்கிறார்கள். இதைச் சாதித்துக் கொள்வதற்குரிய முன்னிபந்தனையாக தமது தனித்துவத்தைப் பலவீனத்திற்குள்ளாக்கிய ''அராபியப் பாரம்பரியம்'' என்ற கருத்துச் சிறையிலிருந்து முழு இலங்கை முஸ்லீம்களும் முற்றாக விடுதலை பெறவேண்டும்.

இத்தகைய விடுதலையைப் பறைசாற்றுகின்ற முழக்கமாக, வடக்கு-கிழக்கு முஸ்லீம்களிடையே உருப்பெற்றிருக்கின்ற தேசிய எழுச்சி அமைந்திருக்கின்றது. தாம் இந்த நாட்டு முஸ்லீம்கள் தான் என்பதையும், தமது உரிமைகள் இந்தநாட்டில்தான் நிலைநாட்டப்பட வேண்டும் என்பதையும் வடக்கு-கிழக்கு முஸ்லீம்களின் தேசிய எழுச்சி திட்டவட்டமாக உணர்த்தியிருக்கின்றது. இந்தத் தேசிய எழுச்சி சரியான முறையில் முன்னெடுக்கப்படுவதிலும், அது தனது இலக்கை (அதாவது முஸ்லீம்களுக்கான தனியான அதிகார அலகை) அடைந்து கொள்வதிலும் தான் இந்நாட்டிலுள்ள முழு முஸ்லீம்களினதும் உரிமைகளுக்கான உத்தரவாதம் தங்கியிருக்கின்றது.

நன்றி - நூலகத்திட்டம்



# சுதாங்ஷு

(பங்களாதேஷ்)

தமிழில்- எஸ்.வி.ராஜதுரை, வ.கீதா.

சூறையாடப்பட்ட கோயிலிலிருந்தும்
எரிந்துபோன அடுக்களையிலிருந்தும்
சுதாங்ஷு"விடம் பேசுகிறது ஒரு குரல்-

''இப்போது நீ போய்விடப் போகிறாயா?''
பொழுது சாயும் வேளையில்
சுதாங்ஷு" சாம்பலில் துழாவுகிறான்
உடைந்துபோன வளையல்களை, 'செயல்களை
குங்குமச் சிமிழை-
சிதறிப்போன நினைவு மணிகளை

அந்தக் குரல் சொல்கிறது
''நாசகாரக் கூட்டம் உன்னைச்சுற்றி அலைகிறது,
விலங்கு வடிவங்கள் உன்னை நெருங்குகின்றன
ஒவ்வொரு நாளும் கொலையாளியின் நிழல்
உன் மேல் விழுகிறது
நீதி என்னும் வெளவால் இறக்கையின் கீழ்
காலம் ஒளிந்து கொண்டுள்ளது-
அப்படி இருந்தும், சுதாங்ஷு",
நீ போகாதே''

ஆற்றின் இடை ஒரு இளம் நாடோடிப்பெண் போல
வானத்திலிருந்து ஒளி இன்னும் ஒடிப்பதுங்கவில்லை
புனிதக் கானகம் இன்னும் தன் பச்சைக் கொடியை
உயர்த்திப் பிடிக்கின்றது
வளைகிறது.

சுதாங்ஷு" போகவே மாட்டான் ஒருபோதும்
தோல்வியுற்ற போர்வீரனைப் போல்,
எங்கும் போக மாட்டான்
இந்தப் புனித பூமியை விட்டு.

## காங்கேசன்....

கொண்ட தொழிற்சாலைகளாக இவை விருத்தி செய்யப்பட்டன. அதற்காக சுண்ணக்கல், களிமண், ஜிப்சம் என்பன அதிக செலவில் இங்கு கொண்டுவரப்பட்டு செயற்கையான முறையில் முழுமையான உற்பத்திகள் ஆரம்பிக்கப்பட்டன. இவ்வுற்பத்திக்கு ஏற்படும் மேலதிக செலவினால் உண்டாகும் நட்டத்தினை காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலையின் வருமானத்தினூடாகவே ஈடு செய்து வந்தனர். இவ்வாறே பரந்தன் இரசாயனத் தொழிற்சாலைக்குப் பதில் அம்பாந்தோட்டையிலும், வாழைச்சேனை காகிதத் தொழிற்சாலைக்குப் பதில் எம்பிலிப்பிட்டியாவிலும் தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றுக்குரிய பற்றாக்குறையான மூலப் பொருட்கள் ஏனைய பகுதிகளில் இருந்தே கொண்டுவரப்படுகின்றன.

கந்தளாய் சீனித்தொழிற்சாலைக்குப் பதிலாக இங்கினியாகலையில் ஒரு தொழிற்சாலை அமைக்கப்பட்டுள்ளது. இப்பகுதி சீனி உற்பத்திக்கு உவப்பற்ற காலநிலையைக் கொண்டது. அதாவது, குறுகிய உலர் பருவமே இங்கு நிலவுகிறது. ஆனால் இதற்கு நீண்ட உலர் பருவம் அவசியமானது. அதனால் வருடத்தின் பெரும் பகுதி உற்பத்தியின்றி இத் தொழிற்சாலை கிடக்கின்றது. இதனால் ஏற்படும் நட்டத்தினை கந்தளாய் சீனித்தொழிற்சாலை ஈடுசெய்கின்றது.

இவை ஒருபுறம் நடைபெற மறுபுறம் வடகிழக்கு தொழிற்சாலைகள் இருக்கும் பகுதிகள் சிங்களமயமாக்கப்படுகின்றன. புல்மோட்டை இல்மனைற் தொழிற்சாலையைச் சுற்றி சிங்கள குடியேற்றங்கள். திருகோணமலை பிறிமா ஆலைப்பிரதேசம் ''தானியகம''என்ற கிராமம் ஆக்கப்பட்டு குடியேற்றம் நடைபெறுவதோடு எழுவது வீதமான தொழிலாளர்கள் வெளிமாவட்டங்களிலிருந்து கொண்டுவரப்படுகின்றனர்.

இந்த வகையில் நோக்கும் போது தொன்றுதொட்டு பேரினவாத அரசாங்கங்கள் பின்பற்றும் வடகிழக்கு பொருளாதார சீர்குலைப்பு நடவடிக்கைகளின் தொடர்ச்சியே காங்கேசன் சீமெந்து தொழிற்சாலை, பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை என்பவற்றின் செயல் இழப்புகள் என்பது சொல்லிப் புரிய வேண்டிய விடயமல்ல.

மொத்தத்தில் தமிழ் மக்களுடைய நிலங்கள் பறிக்கப்படுகின்றன.

தொழில்வாய்ப்புகள் முடக்கப்படுகின்றன.

தொழிற்சாலைகள் மூடப்படுகின்றன.

சுயபொருளாதாரம் அழிக்கப்படுகின்றது.

யுத்தம் மட்டும் தொடர்கிறது.

இவ்வளவும் தமிழ் மக்களுக்கு எதிராக அல்லாமல் வேறென்ன? யுத்தத்தை நிறுத்துவதை விட்டுவிட்டு தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளுக்கு நியாயமான தீர்வு காண்பதை ஒதுக்கி விட்டு, தொழிலாளர்களை நடுத்தெருவில் விட்டுவிட்டுத் தொழிற்சாலைகளை தகனம் செய்வது என்ற அரசின் முடிவை என்னவென்று சொல்வது?

- கரன் -

## மட்டக்களப்பு...

கொள்ளப்பட்டன. இன்னும் பலருக்கு கொழும்பிலும், திருமலையிலுமுள்ள அமைச்சுக்களினதும், திணைக்களங்களினதும் முகவரிகள் கொடுக்கப்பட்டன. சிலருக்கு செயலாளர்களின் பெயருக்குக் கடிதங்கள் கொடுக்கப்பட்டன. பெரும்பாலும் தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகள் இவ்விதமே தீர்க்கப்பட்டன.


கந்தளாய், சேருவில, கோமறன்கடவல, பதவிய சிறிபுர போன்ற சிங்களப் பிரதேசங்களின் பிரச்சினைகளைக் குறியாகக் கொண்டே திருமலை இடம் பெயர் சேவை நிகழ்ந்திருக்கிறது.
இந்த திருமலை ஜனாதிபதி இடம் பெயர் சேவையை நிகழ்த்த ஏற்பட்ட நேரடி, மறைமுக செலவுகள் அனைத்தையும் சேர்த்த முழுத்தொகை ஒரு பெரிய அகதி முகாமைக் குறைந்த பட்சம் ஆறு மாதங்களுக்காவது பராமரிக்கப் போதுமானது என சில அதிகாரிகள் பேசிக் கொண்டது ஞாபகத்திற்கு வருகிறது. இதுதான் ஜனாதிபதி சேவையின் இலட்சணம் என்றால் இதையும் மீறி மட்டக்களப்பில் என்ன அற்புதம் நிகழ்ந்து விடப் போகிறது?

## ஜூலை 83 படுகொலை...

கடைசி சிங்களவர் இருக்கும் வரை இதனை எதிர்ப்போம்' என்று வேகத்தை அதிகரிக்கச் செய்தாரே ஒழிய தணிக்க முயற்சி செய்யவில்லை.
அதே வேளை மலையக தமிழ் மக்கள் பலர் பாதிப்புக்குள்ளான போது இந்திய வெளியுறவு அமைச்சர் பி.வி.நரசிம்மராவ் இந்தியா இலங்கையுடன் தொடர்ந்து உறவுகளை வைத்துக் கொள்ள விரும்புகிறது. எனவே பிரச்சினையைத் தீர்க்க சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தை நாடி உடனே தீர்வு காணும் படி கோரிய போது, இலங்கை அரசு ''இந்தியாவின் நடவடிக்கைகள் அந்த நாட்டின் எல்லைக்குள்ளேயே இருந்தால் இலங்கை மகிழ்ச்சியடையும்'' என தலையீட்டுக்கு பலத்த கண்டனம் தெரிவித்தது.
ஆனால்' இச்சம்பவங்களுடன் தனது கட்சிக்கு எந்தவித தொடர்புமில்லை என காட்டவேண்டி அரசு, வடக்கில் கலவரத்துக்கு காரணமாயிருந்தவர்கள் புலிகளென்றும், தெற்கில் கலவரத்துக்கு காரணம் இடதுசாரிகளென்றும் கூறி ஒகஸ்ட் 1ம் திகதி நவசமசமாஜ கட்சி, இலங்கை கம்யூனிஸ்ட் கல்வி, ஜனதா விமுக்தி பெரமுன போன்ற கட்சிகளைத் தடை செய்தது. தனக்கு இந்த கொலையில் எவ்வித தொடர்புமில்லையென காட்ட பல வழிகளில் முயற்சித்தது.

இவ்வாறு கட்சிகளைத் தடை செய்தல், வெளிநாடுகளில் முரணான பிரச்சாரங்களை மேற்கொள்ளல், தொடர்பு சாதனங்கள் அரசின் கட்டுப்பாட்டுக்குள் வைத்து இயக்குவித்தல், போன்ற வழிகளில் தனக்கும் கலவரத்துக்கும் எந்தவித தொடர்புமில்லை எனக் காட்ட முயற்சித்தது. எனினும் காமினி திசாநாயக்கா பின்னர் ஒருமுறை ''வெளிநாடுகளுக்குச் சென்ற நேரம் தனது கைகளை குழுக்கும் போது தான் வெட்கப்பட்டதாக'' பாராளுமன்றத்தில் கூறியிருந்தார். ஏனெனில் தமிழர்களின் இரத்தம் படிந்த கையென கூச்சப்பட்டதே அதற்கான காரணம். அது தான் உண்மை அதனை மனித நேயமிக்க யாராலும் மறுக்க முடியாது.

**என். எஸ். குமரன்**



மாகாண சபைத் தேர்தல் முடிந்த கையோடு ஆரம்பித்த ஆட்பிடித்தல் இன்னமும் நின்றபாடில்லை.
லைசென்ஸ் இல்லாத நாய் பிடிக்கிற மாதிரி, தமிழ் இளைஞர்களை அள்ளுகிறார்கள் -பிடிக்கிறார்கள் என்பது பொருத்தமாகப் படவில்லை- இந்த தமிழ் இளைஞர்களை அள்ளிக் கொண்டு போதலுக்கு அருவி ஆசிரியர் பாஸ்கரன் அவர்களும் விலக்காகவில்லை. பத்திரிகையாளர்கள் காரணமின்றிக் கைது செய்யப்படக்கூடாது, தாக்கப்படக் கூடாது என்கிற உத்தரவாதத்தையும் வழமைபோல் மீறி கைது செய்திருக்கிறார்கள்.
வழமைபோல பொலிஸ் - விசாரணை- நீதிமன்றம்- பிணை என்று விடுதலையாகி இருக்கிறார்.
தனது கைது தொடர்பாக அவர் அனுப்பி வைத்த அறிக்கை ஒன்றின் ஒரு பகுதி இது;
...இப்படி அரசாங்கம் நடத்துவதைப் பார்த்தால் தமிழ் மக்கள் அனைவரையும் பயங்கரவாதிகளாகவே அது பார்க்கிறது என்பதைத் தான் உணர முடிகிறது. ஒரு நாட்டின் பாதுகாப்புக்கு என்று போடப்பட்ட சட்டங்களும், நடவடிக்கைகளும் இவ்வாறு குறிப்பாக ஒரு இனத்திற்கு எதிராக செயல்படுத்தப்படுகிறது என்பதை நாம் இங்கு அவதானிக்க முடியும்...
...இவர்கள் என்னைக் கைது செய்ததற்கு கொடுத்த சட்டரீதியான விளக்கம் 'நியாயமான சந்தேகத்தின் பேரில்' என்பதே. ஆக, அவர்களுக்கு என்மீது சந்தேகம் எழுந்ததற்கான வலுவான நியாயம் நான் ஒரு தமிழன் என்பதே தான்.
ஆக, பத்திரிகையாளர்களிலும் தமிழ்ப் பத்திரிகையாளர்கள் என்றால் வேறொரு விதி என்கிறது அரசு. நாங்கள் இனி ஒரு புதுவிதி செய்ய வேண்டாமோ?

புலிகளின் சிறையில் உள்ள பொலிஸார் இம் மாதம் 14ம் திகதி மீள உண்ணாவிரதத்தை ஆரம்பித்திருக்கிறார்கள். யூன் 13ம் திகதி முதலில் இவர்கள் ஆரம்பித்த உண்ணாவிரதப் போராட்டம் அவரவர் நலன்களுக்கேற்ப அரசுக்கும் புலிகளுக்கும் இடையே ஏற்பட்ட உடன்பாட்டையடுத்து 22ம் திகதி கைவிடப்பட்டது.
அரசுக்கு அரசினது நலன்களும், புலிகளுக்கு புலிகளின் நலன்களும் முதன்மையாகப் போனாலும் வடக்கிற்கான தடை செய்யப்பட்ட பொருட்களை அனுமதிக்க வேண்டும் என்பதில் மக்களது நலன்களும் பிணைந்திருந்தது, தவிர்க்க இயலாமல்.
முதற் கட்டமாக ஐவர் விடுதலை செய்யப்பட்டனர்.
உடன்பாட்டின்படி பொருட்கள் சீராக வருவது உறுதி செய்யப்பட்டதும் மீதிப் பேரை விடுவிப்பதாகப் புலிகள் கூறியிருந்தார்கள்.
இதற்கிடையே படையினருள் ஒரு பிரிவினருள்ளும், பேரினவாத சக்திகளிடமிருந்தும் வடக்கிற்குப் பொருட்கள் அனுப்புவது தொடர்பாக எதிர்ப்புக் கிளம்பியது. வவுனியாவில் படையினர் பொதுமக்கள் பொருட்களைக் கொண்டு செல்வதை அனுமதிக்கவில்லை.
இந்த நிலையில் தான் புலிகள் முன்னரே கோரியிருந்தபடி வர்த்தமானியில் தடை நீக்கம் உறுதிப்படுத்தாத வரை, பொருட்கள் வடக்கிற்கு ஒழுங்காக வருவது உறுதிப்படுத்தாத வரை பொலிஸாரை விடுவிக்க முடியாது என அறிவித்தனர்.
உடனடியாகவே கொழும்புப் பத்திரிகைகளும், பேரினவாதக் கட்சிகளும் புலிகள் புதிய நிபந்தனை விதித்து விட்டார்கள் என்று கூக்குரலிட்டன.
மறுநாள், புலிகள் வடக்கிற்கு அனுப்பி வைக்கப்பட்ட கப்பலில் இருந்த பொருட்களை கொள்ளையடித்து விட்டார்கள் என்றுவேறு புரளியைக் கிளப்பி விட்டார்கள்.
பத்திரிகைகள் முதற் பக்கத்தில் எழுதின.
புலிகளின் பழைய தந்திரத்திற்கு அரசு பலியாகி விட்டது என்றன.
இவை அனைத்தும் உணர்த்துவது எதனை?
எழுதுவதற்கான சுதந்திரம் என்பது எல்லாவற்றையும் எழுதிக் குவித்து விடலாம் என்பதனையா?
புலிகள் புதிய நிபந்தனை எதையும் விதிக்கவில்லை. பொருட்கள் வடக்கிற்கு வருவதை உறுதிப்படுத்தவே கோரினார்கள் என்று எவரும் ஏன் பேசவில்லை? (தமிழ்ப் பிரதிநிதிகள் கூட) புரியவில்லை!

நன்றி - நூலகத்திட்டம்

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

சரிநிகர்

# மட்டுநகர் ஜனாதிபதி இடம் பெயர் சேவை


# பரபரப்பும் பம்மாத்தும்

அவசர அவசரமாக அரசடிச் சந்தியில் இன்னொரு மணிக்கூட்டுக் கோபுரம் நிர்மாணிக்கப்பட்டு வருகிறது. பொது நூலகத்தை அண்மிய வாவிக் கரையோரம் தரையை நோக்கி ஒளி வீசுகிற இரவு மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருக்கிறது. ஒரு பலத்த மழையடித்து மூடப்பட்டுள்ள மணல் கரைந்தோடுகின்ற வரையில்தான் தற்போது செப்பனிடப்பட்டுக் கொண்டிருக்கிற வீதிகள் சிறப்பானது எனச் சொல்ல முடியும். இம்மாதம் 23, 24, 25 ம் திகதிகளில் மட்டக்களப்பில் நடைபெறவிருக்கிற ஜனாதிபதி இடம் பெயர் சேவையை யொட்டி இந்தப் பரபரப்பு.

இது இவ்விதமிருக்க பொலன்னறுவையில் இருந்து மட்டக்களப்பு வருகிற வரை எல்லாமாக முப்பது இராணுவ முகாம்களையாவது தரிசிக்கலாம். முகாம்களைச் சுற்றியுள்ள காடுகள் ஏக்கர்கணக்கில் அழிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு முகாமைச் சுற்றிலும் முன்னூறு தொடக்கம் நானூறு மீற்றர் வரையிலான நீளமுள்ள புதிய வீதிகள் அமைக்கப்பட்டுள்ளன. பத்துப் பன்னிரண்டு சோதனை நிலையங்களின் கெடுபிடிகளை தமிழ் பேசும் பயணிகள் முகம் கொள்ள வேண்டும். நகரத்திற்குள் ஒவ்வொரு சந்தியிலும் காவல் நிலை. பஸ் நிலையத்திற்குச் செல்கிற ஒருவர் குறைந்தது மூன்று தடவைகள் சைக்கிளை விட்டு இறங்க நேரிடும் இன்னும் கூட தமிழ்க் கிராமங்கள் அதிகாலையில் சுற்றி வளைக்கப்பட்டு பொது மக்கள் முகாம்களுக்கு அழைத்துச் செல்லப்படுவது தொடர்வதுடன் புதிதாக கறுப்பு நிற உடையணிந்த ஒரு மோட்டார் சைக்கிள் படை மட்டக்களப்புப் பிரதேசத்தில் உலா வருகிறது.

உண்மையில் என்ன நிகழப் போகிறது.

ஜூலை 23ம் திகதி காலை மட்டக்களப்பு நகரம் சுறுசுறுப்படைகிறதோ



இல்லையோ இராணுவத்தினரும் பொலிசாரும் மிகச் சுறுசுறுப்பாக இயங்குவர். அடிக்கடி ஹெலி கொப்டர்கள் வரும் போகும். தனியார் போக்குவரத்து வாகனங்கள் முற்றாகத் தடை செய்யப்படும். வெள்ளை, மஞ்சள் என இரு நிறங்களில் அனுமதிச் சீட்டு ஒட்டப்பட்ட வாகனங்கள் மிக வேகமாக நகரத்திற்குள் நடமாடும்.

இடம் பெயர் சேவை நிகழ இருக்கும் இந்துக் கல்லூரிக்குள் (பழைய கோட்டை முனை மகா வித்தியாலயம்) மஞ்சள் நிற அனுமதிச் சீட்டு ஒட்டப்பட்ட வாகனங்கள் மட்டுமே நுழையும். இந்துக் கல்லூரிக்கு முன்பாக உள்ள இரு நுழை வாயில்களினூடாக ஆண்கள் பெண்கள் என பொதுமக்கள் அனுமதிக்கப்படுவார்கள். வெள்ளை நிற உடையணிந்த நால்வர் (இரு பெண்கள் உட்பட) கையுறைகளுடன்நுழைகிற ஒவ்வொருவரையும் மிக நுணுக்கமாகப் பரிசோதனை செய்வார்கள்.

இந்த இடத்தில் 92 மேயில் வவுனியாவிலும், 93 ஜனவரி திருமலையிலும் நிகழ்ந்த ஜனாதிபதி இடம் பெயர் சேவை ஞாபகத்திற்கு வருகிறது. வவுனியாவில் நடைபெறும் சிங்களக் குடியேற்றங்களிலிருந்து, காணாமல் போன இளைஞர்களின் பெற்றோர் கொடுத்த மகஜர் வரை இந்த மாதிரியான எவற்றிற்கும் எந்த மாதிரியான பதிலும் இதுவரை இல்லை. இதே நிலைதான் திருமலை ஜனாதிபதி இடம் பெயர் சேவையிலும் ஏற்பட்டது. பாதுகாப்புக் காரணங்கள் கருதி ஏராளமான மரங்கள் வெட்டப்பட்டன. ஆயினும் பாடசாலைகளுக்கிடையில் சூழல் பாதுகாப்புச் சம்பந்தமான சுவரோவியப் போட்டி நடைபெற்றது.

பலருடைய முகவரிகள் குறித்துக்

—— 11



ஜனநாயக ஐக்கிய தேசியக் கட்சி ஒரு போதும் ஐ.தே.கவுடன் சேராது''.

-காமினி லங்காதீபவில் (18.06.93)

''ஐக்கிய தேசியக் கட்சி காமினி கூட்டு உறுதியாகிவிட்டது''

செய்தி-வீரகேசரி (05.07.93)

அரசின் கரும்பூனைகள் பற்றிய தகவல்களை மக்கள் மத்தியில் ஒரு நாள் அம்பலப்படுத்துவேன்.

-உடுகம்பொல-சத்தியக் கடதாசி (31.01.92)

சத்தியக் கடதாசியில் உள்ளவற்றைத் தீர விசாரிக்காமல் வெளியிட்டு விட்டேன். அதனை நான் வாபஸ் வாங்குகிறேன்.

உடுகம்பொல- சத்தியக் கடதாசி-(07.07.93)

''இராணுவக் கட்சியான விடுதலைப் புலிகளுடன் ஒன்றிணைந்து செயல்படவேண்டும்''

டி.பி.விஜேதுங்க-வீரகேசரி (29.05.93)

''இது இனப்பிரச்சினையல்ல பயங்கரவாதப் பிரச்சினை''..பயங்கரவாதிகளுக்கு பிரபாகரன் தலைமை தாங்குகிறார்''.

டி.பி.விஜேதுங்க-வீரகேசரி (29.05.93)

''வடக்கு கிழக்கு இணைப்பு வேண்டுமா? வேண்டாமா? 4 மாதங்களுக்குள் கிழக்கில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படும்''

தெரிவுக்குழு- தினகரனில்-(11-06-93)

''ஜனாதிபதித் தேர்தலுக்கு முன் கிழக்கு சர்வஜன வாக்கெடுப்பு நடைபெறாது''

தெரிவுக்குழு -வீரகேசரி- (07.07.93)

''புலிகளின் ஆயுதங்கள் அனைத்தும் களையப்படும் வரை இராணுவ நடவடிக்கை தொடரும்''.

ரணில் விக்கிரமசிங்க - வீரகேசரி (12.01.92)

'இனப்பிரச்சினை தொடர்பாகப் புலிகளுடன் பேச்சுவார்த்தை மூலம் தீர்க்க அரசு தயார்''

ரணில் விக்கிரமசிங்க - லங்காதீப - (1.07.93)

# 'காங்கேசன் சீமெந்து தொழிற்சாலை

# அரசின் திட்டமிட்ட

# புறககணிப்பும் சதியும்

கடந்த தொண்ணூறு யூனில் யுத்தம் ஆரம்பம் ஆகியதோடு வடக்கில் இருந்த இரண்டு தொழிற்சாலைகளான காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலையும், பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையும் செயலிழந்தன. உற்பத்தி நடைபெறவில்லை. ஊழியருக்கான சம்பளப்பணம் நிறுத்தப்பட்டது. எனினும் ஊழியர்களின் கோரிக்கையைத் தொடர்ந்து சம்பளப்பணத்தின் ஒருபகுதி வழங்கப்பட்டு வந்தது.

காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலை ஊழியர்களுக்கு வழங்கப்பட்டு வந்த இச்சம்பளப்பணம் புத்தளம், காலி சீமெந்துத் தொழிற்சாலைகளின் வருமானத்தில் இருந்தே வழங்கப்பட்டு வந்ததாகவும் இப்போது அவ்விரு தொழிற்சாலைகளும் 'மக்கள் மயப்படுத்தப்படுவதால்' இனிமேல் அவ்வாறு வழங்கப்பட முடியாது எனவும் கூறி காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலையை மூடிவிடப் போவதாக அறிவித்திருக்கிறது அரசு.

இதன் பின் சென்ற யூன் மாதம் பதினோராம் திகதியிடப்பட்ட சுற்று நிருபம் ஒன்று முகாமையாளரால் ஊழியர்களுக்கு வழங்கப்பட்டது. அதன்படி ஒரு மாத முன்னறிவித்தலின் பேரில் யூலை பதினைந்தாம் திகதி ஊழியர்கள் வேலை இழந்தவர்களாக கருதப்படுவர். அதற்கு முன்பாக ஓய்வு பெற விரும்புவோர் விண்ணப்பிக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆயிரத்து தொள்ளாயிரத்து நாற்பத்தி எட்டின் பிற்பகுதியில் டி.எஸ்.சேனநாயக்காவின் கூட்டு அமைச்சரவையில் ஜீ.ஜீ.பொன்னம்பலம் கைத்தொழில் அமைச்சராக இருந்தவர். இவரது காலப்பகுதியிலேயே இத் தொழிற்சாலை உட்பட பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை, வாழைச்சேனை காகிதத் தொழிற்சாலை என்பன உருவாக்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

இவ்வகையில் ஐம்பதுகளில் உருவாக்கப்பட்ட இத் தொழிற்சாலைகள் சிறந்த முறையில் இயங்கின என்பதும் அதிக வருமானத்தை ஈட்டிக் கொடுத்தன என்பதும் குறிப்பிடத்தக்கது. குறிப்பாக காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலை ஏனைய தொழிற்சாலைகளைவிட அதிக வருமானத்தைப் பெற்றுக் கொடுத்ததை அரசாங்கமே ஒப்புக் கொண்டுள்ளது. அத்துடன் காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலையின் மிகை வருமானமே புத்தளம் காலி தொழிற்சாலைகளின் நட்டத்தை ஈடுசெய்யப் பயன்படுத்தப்பட்டது என்பதும் பலர் அறிந்த ஒரு விடயம்.

இந்த சீமெந்துத் தொழிற்சாலையை



வடக்கில் உருவாக்க முனைகிறார் என ஜீ.ஜீ பொன்னம்பலத்திற்கு எதிராகவும் இத்திட்டத்திற்கெதிராகவும் கண்டனமும் எதிர்ப்பும் தெரிவித்தார்கள் பேரினவாதிகள் எனினும் சீமெந்துத் தொழிற்சாலைக்கான மூலப் பொருளான சுண்ணக்கல் வடக்கில் இருந்ததால் இதனைத் தடுத்து நிறுத்த முடியாது போய்விட்டது. சிறில் மத்தியூ கைத்தொழில் அமைச்சராக இருந்தகாலத்தில் தனியார் துறைக்கும் சீமெந்து உற்பத்திக்கு அனுமதி வழங்கப்பட்டது. அவர்கள்கூட காங்கேசன்துறையையே தமது கைத்தொழில் மையமாக தெரிவு செய்து லங்கா சீமெந்துத் தொழிற்சாலையை அமைத்தனர். இவ்யதார்த்தம் மறுக்கமுடியாதது

ஆனால் இதற்கு மாற்றீடான தொழிற்சாலைகளை தென்பகுதியில் நிறுவுவதற்கு ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் முயன்றன. ஆரம்பத்தில் காங்கேசனில் தயாரிக்கப்படும் கிளிங்கரை ரெயில் பெட்டிகளில் ஏற்றி வந்து சீமெந்தாக அரைக்கும் மில்களாக மட்டுமே காலியும் புத்தளமும் அமைக்கப்பட்டன. இந்த மில்களையும் காங்கசேனிலேயே அமைத்திருக்க முடியும். ஆனால் காங்கேசன் தொழிற்சாலையின் முழு முக்கியத்தைக் குறைப்பதே இதன் நோக்கமாகும்.

காலப்போக்கில் கிளிங்கரை உற்பத்தி செய்யும் சூளைகளையும்

—— 11

சரிநிகர் மாத இதழ் இல. 18/2 அலோசாலை, கொழும்பு 03,